
குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 36 ] நள ஆண்டு கார்த்திகைத் திங்கள் 10—12—76 [ இதழ் 1



திருவாதிரை நாளில் தில்லைப் பெருங்கூத்தன்
அருள் நடனம் போற்றி அல்லலறுத் தின்புறுவோம்.

திருவாதிரைத் திருநாள் 5 — 1 — 77

தருமையாதீனக்குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

குருபாதம்

## "ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 36 || 10-12-76 || இதழ் 1

## உட்பொருள்

எண் — பக்கம்

1 வைகறைத் துயில் எழு 1
2 தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ... 8
3 'புத்தாண்டு வாழ்த்து' 15
4 வாரியார் வாக்கு ... 16
5 தலச் சிறப்புக்கள் ... 17
6 "அண்டத்து அரும் பெறல் மேகன்" ... 27
7 சொக்கநாத வெண்பாவில் காணப்பெறும் சிவபெருமான் பற்றிய விளிகள் ... 31
8 உங்கள் திறமைக்கோர் சோதனை ... 35
9 திருவோத்தூரில் குடமுழுக்கு விழா ... 36
10 செய்திகள் ... 37
11 மாத ஜன்மநட்சத்திர வழிபாடு ... 42
12 வியன் குருவாய்வந்து அருள்க! ... 43
13 எதிர்காலம் ... 44
14 பார்வையாளர் குறிப்பு 14
15 'ஞானசம்பந்தம்' முப்பத்தைந்தாம் ஆண்டு மலர்ப் பொருளடக்கம் ... i
16 கடிதம் ... iv
17 சென்ற இதழ்க் கணக்கு விடை ... ,,
18 மாரடைப்பைத்தடுக்கப் பூண்டு சாப்பிடுங்கள்

(பின் அட்டையில்)

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு


அருவருப்பே மெத்தியிடும்
 ஆகத்தைச் சற்றும்
அருவருக்கத் தோற்றுதில்லை
 ஐயோ — அருவருக்கத்
தோற்றியிடா தென்னவினை
 துய்ப்பித் தறுப்பதற்கோ
சாற்றியிடாய் சொக்கநா
 தா.

— சொக்கநாத வெண்பா-23.

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்



தம்திருபேர் தாங்கிவரத் தண்கருணை பாலித்த
நம்முடைய முதற்குரவர் குருஞான சம்பந்தர்.

உ

சிவமயம்

தருமையாதீனம்

"ஞானசம்பந்தம்" திங்கள் இதழ்

சந்தாதாரர்களுக்கு

# ஓர் அறிவிப்பு

தருமை யாதீனத்திலிருந்து திங்கள்தோறும் மலர்ந்து செந்தமிழ் மணமும் சிவமணமும் பரப்பி சிவஞானத்தேன் நிறைந்து கற்போர் கருத்தைக் கவர்ந்துவரும் "ஞானசம்பந்தம்" முப்பத்தைந்தாவது ஆண்டின் நிறைவைப்பெற்று முப்பத்தாறுவது ஆண்டின் தொடக்க இதழாக மிக்க எழிலுடன் வெளிவருகிறது.

10—11—1976 இல் வெளிவரும் இதழுடன் "ஞானசம்பந்தம்" இதழின் 35 வது ஆண்டு நிறைவுற்றதால் பழைய சந்தாதாரர்கள் தனி அறிவிப்பை எதிர்பாராமல் மீண்டும் தொடர்ந்து ஆண்டுக்கட்டணம் செலுத்தியும், புதிய சந்தாதாரர்களாகச் சேர விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு ஆண்டுக் கட்டணம் அனுப்பியும் "ஞானசம்பந்தம்" இதழைப் பெற்றுக் கற்றுப் பயனுறுவார்களாக.

வேலைமிகுதியினாலோ அல்லது மறதியினாலோ ஆண்டுச் சந்தா செலுத்துவதில் தடை ஏற்படலாம் தடையில்லாமல் "ஞானசம்பந்தம்" பெற வாய்ப்பளிக்கும் முறையில் ஆயுள் சந்தா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆயுள் சந்தா அறிவிப்புச் செய்தது முதல் இன்றுவரை நானூற்றுநாற்பது அன்பர்களுக்கு மேலாக ஆயுள் சந்தா செலுத்திப் பலர் ஆயுள் உறுப்பினராகி உள்ளனர்.

ஆயுள் சந்தா செலுத்தினால் அவர்களது வாரிசுகளும் "ஞானசம்பந்தம்" பெற வசதி செய்துதரப்படும். மேலும் தமது ஆயுள் சந்தாவை மற்றவர்களுக்கோ, கல்வி அறநிறுவனங்களுக்கோ மாற்றிக் கொடுக்க விரும்பினால் அதற்குரிய ஏற்பாடுகளும் செய்துதரப்படும்.

இவ்வரிய வாய்ப்பைப் பயன்படுத்தி ஆயுள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து "ஞானசம்பந்தம்" பெற்றுப் பயன் அடையுமாறு கேட்டுக்கொள்கிறோம். இன்றே உங்களை ஆயுள் உறுப்பினராக்கிக்கொள்ளுங்கள்.

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா (உள்நாடு) | ரூ | 6—00 |
| ஆண்டுச் சந்தா (சிலோன்) | ரூ. | 7—00 |
| ஆண்டுச் சந்தா (வெளிநாடு) | ரூ. | 10—00 |
| ஆயுள் சந்தா | ரூ. | 100—00 |

கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி :—

செயலாளர்,

ஞானசம்பந்தம் செயலகம்,

தருமபுரம், மாயூரம் 609 001

தஞ்சை மாவட்டம்.

குறிப்பு :—

ஞானசம்பந்தம் தவிர பிற தருமையாதின வெளியீடுகளைப் பெற விரும்புவோர் மேலாளர், ஞானசம்பந்தம் பதிப்பகம் தருமபுரம், மாயூரம்-609 001 என்ற முகவரிக்கே தொகை அனுப்பிப் பெறவேண்டும்.

தருமையாதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**



ஞான சம்பந்த நல்லிதழைத் தோற்றுவித்த
ஞான குரவர் நற்றிருத்தாள் போற்றுதுமே.

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 36 | நள - கார்த்திகை - 10—12—76 | இதழ் 1

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## வைகறைத் துயில் எழு

### முந்தையோர் கண்ட முறை :

'வைகறைத் துயில் எழு' என்பது ஆன்றோர் வாக்கு. உழைத்து அலுத்த உடலின் உட்கருவிகள் எல்லாம் இரவில் தேய்மானத்தை நிறைவு செய்துகொள்வதுடன், புதிய வளர்ச்சிக்குரிய பகுதிகளையும் பெற்று நிறைவதனல், தூக்கத்துக்குப்பின் நாம் புதிய உற்சாகத்தோடு கடமைகளில் ஈடுபடுகின்றோம். வைகறைப்பொழுது என்பது ஒருநாளின் முதற்பகுதியாக விளங்குகின்றது. ஒருநாளை நமது முன்னோர் ஆறு சிறு பொழுதுகளாகப் பிரித்து, பொழுதொன்றுக்கு 10 நாழிகையாகப் (4-மணி) பகுத்தனர். அவை : 1. வைகறை. 2. காலை. 3. நண்பகல். 4. எற்பாடு. (எல் - சூரியன். பாடு - படுதல்.) 5. மாலை. 6. யாமம் என்பன. வைகறை என்பது விடியல் 2—மணிமுதல் 6-மணிவரை என்றும், இவ்வாறே ஏனையபொழுதுகளையும் நான்கு நான்குமணியாகக்கூட்டிக் கணக்கிடவேண்டுமென்றும் முன்னோர்

வகுத்தனர். எனவே காலை 2-மணிமுதல் 6-மணிக்கு உட்பட்ட வைகறைப் பொழுதில் எழுந்து, நீராடி, இறைவனை வழிபட்டு காலைக் கடமைகளைத் தொடங்குதல் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததாகின்றது. இதனை,

"வைகறை யாமம் துயிலெழுந்து தாம்செய்யும்
நல்லறனும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை"

என்று வைகறையில் துயில் எழுந்து இயற்றவேண்டிய காலைக் கடமைகளை ஆசாரக்கோவை அழகுற விளக்குகின்றது.

### பெரும் பொழுதுகள் :

ஒருநாளை ஆறு சிறுபொழுதாகப் பிரித்தலைப் போலவே ஓர் ஆண்டினையும் ஆறு பகுதிகளாகப் பிரித்தனர். தேவர்களுக்கு ஓர் ஆண்டு ஒருநாளாதலின் இப்பகுதிகள் ஆறும் பெரும் பொழுதுகள் எனப்பட்டன. இப்பெரும்பொழுதுகள் இரண்டு இரண்டு மாதங்களாக ஆவணிமுதலாகக் கணக்கிடப்படுகின்றன. இவற்றை முறையே கார்காலம், கூதிர்காலம் (மழைக்காலம்), முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனிற்காலம், முதுவேனிற்காலம் எனப்பகுப்பர். ஓராண்டுக்காலத்தை உத்தராயணம், தட்சிணாயனம் என இரண்டு கூறுகளாகப் பகுப்பதும் உண்டு. உத்தராயணம் என்பது வடபாற் போக்கு எனப்படும். அஃதாவது நமது நாட்டில் சூரியன் வடதிசை நோக்கிச் செல்வது போலக் காணப்படுவது. தட்சிணாயனம் என்பது தென்பாற் போக்கு. இங்கு சூரியன் தென்திசைநோக்கிச் செல்வதுபோலக் காணப்படுவது. ஓராண்டுக் காலத்தைத் தேவர்களுக்கு ஒரு நாளாகக் கூறுதல் மரபு. மனிதர்களுக்குரிய ஓர் நாள் பகல் இரவு என இருபகுதிகளாகப் பிரிக்கப்படுதல்போல தேவர்களுக்குரிய ஓர் ஆண்டாகிய ஓர் நாளில் உத்தராயணம் பகலாகவும், தட்சிணாயனம் இரவாகவும் அமைகின்றது. உத்தராயணத்தில் பகல்பொழுது அதிகமாக விளங்குகின்றது. தட்சிணாயனத்தில் இரவுப்பொழுது அதிகமாக உள்ளது.

### நடராஜர் அபிஷேகம் :

தில்லை ஸ்ரீ நடராசப் பெருமானுக்கு ஆண்டு ஒன்றில் நிகழும் ஆறு அபிடேகங்களும் தேவர்களுக்குரிய ஆறு பொழுதுகளின் அமைப்பிலேயே நிகழ்த்தப்பட்டுவருகின்றன. இவை

முறையே மார்கழி, மாசி, சித்திரை, ஆனி, ஆவணி, புரட்டாசி மாதங்களில் நடைபெறுகின்றன. இதனைச்,

" சித்திரையில் ஓணமுதற் சீரானி யுத்திரமாம்
சத்ததனு வாதிரையுஞ் சார்வாகும் — பத்திவளர்
மாசியரி கன்னி மருவு சதுர்த்தசிமன்
றிசரபி ஷேகதின மாம். "

என்னும் பாடல் விளக்குகின்றது. இவற்றுள் மூன்று நட்சத்திரத்திலும், மூன்று திதியிலும் அமைகின்றன. வைகறை என்பது காலை 2-00 மணி முதல் 6-00 மணி வரை என்பதனால் வைகறையின் தொடக்கத்திலேயே நடராஜா அபிஷேகம் சிதம்பரத்தில் தொடங்கப்படுகிறது. அவற்றுள் மார்கழித் திங்கள் திருவாதிரை நாளில் நிகழும் அபிஷேகம் வைகறையில் நிகழும் முதற்கால அபிஷேகமாகவே கொள்ளப்படுகின்றது.

## ஆறுகால பூஜைகள் :

ஒருநாளை ஆறு சிறுபொழுதுகளாகப் பிரித்து, ஒவ்வோர் பொழுதிலும் இறைவனை வழிபடவேண்டுமென்பதற்காகவே ஆறுகால பூஜை முறைகளை நமது திருக்கோயில்களில் முன்னோர் வகுத்தனர். காலை 2 மணி முதல் 6 மணிக்குள் உஷக்காலமும், 6 மணி முதல் 10 மணிக்குள் காலைசந்தியும், 10 மணி முதல் பகல் 2 மணிக்குள் உச்சிக்காலமும், 2 மணி முதல் மாலை 6 மணிக்குள் சாயரட்சையும், மாலை 6 மணி முதல் இரவு 10 மணிக்குள் இரண்டாங்காலமும், இரவு 10 மணிக்குமேல் இரவு 2 மணிக்குள் அர்த்தஜாமமும் என இவ்வாறு காலங்களும் குறிக்கப்படுகின்றன. இவற்றுள் உஷக்காலம் காலை 4 மணிமுதல் 6 மணிக்குள்ளாகவும், சாயரட்சை மாலை 4½ மணிமுதல் 7½மணிக்குள் சூரியன் மறையும் பிரதோஷ காலத்திலும், இரண்டாங்காலம் மாலை 8 மணிமுதல் இரவு 9 மணிக்குள்ளும், அர்த்தஜாமம் இரவு 10 மணிக்குமேல் 10½ மணிக்குள்ளாகவும் செய்தல் சிறந்ததாகும். இவற்றுள் வைகறையில் நிகழும் உஷக்கால பூஜை ஒருநாளின் முதற்கால பூஜையாதலின் நமக்கு இன்றியமையாததாகின்றது. ஆறுகாலபூஜையையும்தரிசிக்க இயலாதவர்கள் காலை உஷக்காலத்தும், மாலை சாயரட்சையிலும்மட்டுமாவது தரிசித்தல் வேண்டும்.

## வழிபாட்டிற்குரிய மாதம் :

இதுபோலவே, மார்கழித்திங்கள் தேவர்களுக்கு வைகறைக் காலமாதல் பற்றி, இத்திங்களில் நாம் அனைவரும் வைகறையில்

துயில் நீங்கி, தூய நீரில் ஆடி, சமயச்சின்னங்கள் அணிந்து இல்லத்திலும், திருக்கோயில்களிலும் சென்று வழிபடுதல் இன்றியமையாததாகின்றது. இத்திங்கள் முழுவதும் இவை தவறாது நிகழ்த்தப்பெறின் ஓர் ஆண்டு முழுவதும் நிகழ்த்தியதற்கு நிகராகின்றது. இச்சிறப்புப் பற்றியே இத்திங்களை முழுவதும் வழிபாட்டிற்கு என ஒதுக்கி, உலகியல் நிகழ்ச்சிகளாகிய திருமணம்முதலியவற்றைத்தவிர்த்து வைத்துள்ளனர் முன்னோர். எப்போதும் இடையறாது இறைவனைச் சிந்தித்திருக்கவேண்டுவது அனைவருக்கும் உரியகடமையாகும். என்றாலும் உலகியலில் ஈடுபட்டுள்ள பலருக்கு இது இயல்வதன்று. இவர்கள் காலை எழுந்தவுடன் நீராடி சில நிமிட நேரமாவது தம் வழிபடு தெய்வத்திற்கு மலரிட்டு வணங்கிப் பின்னர்த்தமது கடமைகளில் ஈடுபடலாம். அதுபோல ஆண்டின் 12 மாதமும் வழிபாட்டுக் குரியனவே என்றாலும் தேவர்களுக்கு வைகறைப் பொழுதாக விளங்குகின்ற மார்கழி மாதத்தினை மட்டுமாவது, வேறு உலகியல் நிகழ்ச்சிகளுக்கு ஒதுக்காது, வழிபாட்டிற்கே ஒதுக்கினால், ஏனைய மாதங்களில் வழிபட இயலாதுபோயினும், உரிய பயனை எய்தலாம் என்பதே இம்மார்கழி வழிபாட்டின் நோக்கமாகும்.

## திருவாதிரைத் தரிசனம் :

ஆண்டுக்கு உரிய நலங்களை எல்லாம் இவ்வொரு திங்களே வழங்குதலால் இத்திங்களைப் பெருமையுடைய திங்கள் என்னும் பொருளில் பீடுடையமாதம் என்றனர். இதையறியாதவர் இதனைப் பீடை மாதம் எனப் பிறழ உணர்ந்தனர். ஆதிரையான் என அழைக்கப்பெறும் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானுக்குகந்த திருவாதிரைத் திருநாளும், திருமாலுக்கு உகந்த வைகுண்ட ஏகாதசியும் இத்திங்களிலேயே அமைவது இதன் சிறப்பினை விளக்குவதாகின்றது. திருவாதிரை நாளைத் தரிசனம்எனவழங்குகின்றனர். ஏனையமாதங்களில் நிகழும் நடராசப்பெருமானின் அபிடேகதினத்தைத் தரிசனம் என்று குறித்தல் இல்லை. எனவே, வைகறையில் எழுந்து இறைவனைத் தரிசித்துத் தொடங்கும் மரபினையே தரிசனம் என்ற வழக்கு விளக்குகின்றது. வைணவத்திலும் சொர்க்கவாசல் திறத்தல் என்பதுவும் திருமால் தரிசனத்தையே விளக்குகின்றது.

## அப்பர் பெருமான் அருள் வாக்கு :

இத்தகு பெருமையும் - சிறப்பும் மிக்க மார்கழித் திங்களில் வைகறையில் துயிலெழுந்து - நீராடி வழிபடுவது இன்றியமை

யாதது. நமது திருக்கோயில்களில் வைகறையில் மார்கழித் திங்கள் முழுவதும் திருப்பள்ளியெழுச்சி பூஜை நடைபெற்று வருகின்றது. தூய்மையாக நெஞ்சம் விளங்கும் வைகறையில் துயில் எழுந்து, புறத் தூய்மையினை விளக்கும் குளிர்ந்த நீரில் நீராடுதல் செய்து வழிபடுவதே சிறந்த நியமம் என்பதனை அப்பர் பெருமான்,

" நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா செயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே "

என விளக்கியருளுகின்றார்.

## இயமமும் நியமமும் :

கிடைத்தற்கரிய மானுட யாக்கையினைப் பயன்படுத்திக் கொண்டு இறைவனது திருவடிகளைச் சாரமுயல்வோரே பெரியோர் எனப்படுவர். அத்தகு பெரியோர்கள் இம்மையில் மேற்கொள்வது தவமேயாகும். அத்தவநிலை இரண்டு கூறாகப் பேசப்பெறும். ஒன்று இயமம்; மற்றொன்று நியமம். இவற்றுள் இயமம் என்பது சிறியோர்க்குரிய செயல்களைச் செய்யாமை. அவை; வெகுளாமை; வெஃகாமை; கள்ளாமை; கள்ளுண்ணாமை; புலால் உண்ணாமை; கொல்லாமை; பிறன்மனை நயவாமை பொதுமகளிரை நயவாமை; பொய்யாமை எனப் பலவாகப் பேசப்பெறும். இவையே நோன்பு அல்லது விரதம் எனப்பெறும். இவை துறவியர்க்கேயன்றி, இல்லறத்தில் நிற்பாரும் மேற்கொள்ளவேண்டிய நியதிகளேயாகும். இச்செயல்கள் ஞானம், மக்கட்பேறு, நோயின்மை, நீடிய வாழ்நாள் இவற்றை நல்குகின்றன. இதனை,

" இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர் "

என்னும் குறள்நெறி மூலம் உணரலாம்.

இனி, இரண்டாவதாகிய நியமம்என்பது உள்ளமும் உடலும் செருக்கித் திரியாது அடங்குதற் பொருட்டுக் குளிர்ந்த நீரில் பல முறை குளித்தல், வறு நிலத்துக் கிடத்தல், உண்டி சுருக்கல்,

வழிபடல் முதலியவற்றை மேற்கொள்ளுதலாகும். இவ்வாறுன இயமம் - மற்றும் நியமங்களே மேற்கொண்டு ஆண்டு முழுவதும் ஒழுகுதல் இன்றியமையாதது எனினும், ஆண்டில் ஓர் திங்களாவது இந் நோன்புகளைக் கடைபிடித்தல் வேண்டுமென்பதும், அதற்கு உகந்தகாலம் மார்கழித் திங்களே என்பதும் நமது முன்னோர் கண்டு அறிவுறுத்திய நெறிமுறைகளாகும்.

## திருவெம்பாவைத் தத்துவம் :

இதனையே, நாம் மார்கழித்திங்களில் ஓதி வழிபடும் மாணிக்கவாசகர் அருளிய திருவெம்பாவை விளக்கி நிற்கிறது. பெண்களது நோன்பினை அவை வெளிப்படையாகப் பேசினும் அருள் தாகமெடுத்த உயிர்கள் அனைத்தும் மேற்கொள்ளத்தக்க வீடுபேருகிய நிலையான இன்பம் நோக்கிய பயணத்தினையே அவை உள்ளீடாகக் கொண்டுள்ளன.

> " மலஇருளூற்று றங்காமல் மன்னுபரி பாகரருள்
> சலமுழுக வருகவென்ச் செப்பல்திரு வெம்பாவை"

எனத் திருவெம்பாவை பற்றிய பழையகுறிப்பு ஒன்று பேசுவதைக் காணலாம். உலகுக்காக மழை வேண்டலும், தமக்காக நல்ல கணவர்களை வேண்டுதலுமே இவற்றுள் பேசப்பெற்றுள்ளன என்பதனைக் காணுகின்றேம்.

## வழிபட்டு உய்க :

எனவே மக்கள் அனைவரும் இம்மார்கழித் திங்களில் ஒவ்வோர் நாளும் தவருது வைகறையில் துயில் நீங்கி எழுதல் வேண்டும். காலைக்கடன் முடித்து நீராடி தத்தமக்கு ஏற்ற நிலையில் சிவபெருமானுக்குரிய பூஜைகளை நிகழ்த்த வேண்டும். திருப்பள்ளி எழுச்சியினையும், திருவெம்பாவையினையும் பாராயணம் செய்தல் வேண்டும். காலை மாலை அண்மையில் உள்ள சிவன்கோயிலுக்குச் சென்று வழிபாடு நிகழ்த்துதல் வேண்டும். தீய நினைவோ, சொற்களோ, செயல்களோ தங்கண் அமையாது பேணி ஒழுகி உலக நலங் குறித்தும், தம் உயிர் ஈடேற்றங் குறித்தும் இடையருது சிந்தித்தல் வேண்டும். இத்தகு நியதிகளை மேற்கொள்வதோடு மார்கழித் திருவாதிரை நாளில் அண்மையில் உள்ளவர்கள் சைவர்களுக்கு இன்றியமையாத சிவத்தலமாகிய சிதம்பரத்திற்குச் சென்று நடராசப் பெருமானைத் தரிசித்தும் ஏனையோர் தத்தம் ஊர்களிலுள்ள நடராசப்பெருமானை எழுந்தருளச் செய்வித்து வழிபட்டும், இம்மை மறுமைப் பேறுகளைப் பெற்று உய்வார்களாக.

# "ஞானசம்பந்தம்" புத்தாண்டு

"ஞானசம்பந்தம்" இதழுக்குப் புத்தாண்டு தொடங்குகின்றது. முப்பத்து ஐந்தாண்டுகள் நிறைவெய்தி முப்பத்து ஆறுவதாண்டு தொடங்குகின்றது. சமயப்பணி புரியும் தெய்விக இதழாக - தமிழ் மணம் பரப்பும் அமுத இதழாக மலர்ந்து வரும் "ஞானசம்பந்தத்தின்" பணிகளைத் தமிழகம் மட்டுமின்றி அயல் நாடுகளிலுள்ள தமிழ்கூறு நல்உலகமும் நன்கு அறியும்; உயிர்த் துணையாக உள்ள பரம்பொருளின் திருவருட் செய்திகளைக் கட்டுரைகளாக, குருமணியவர்களது அருளாசிகளாக, காலந்தோறும் வெளியிட்டுவரும் இவ்விதழ் தம்முடைய ஆயுட்காலம் முழுமையும் தக்க அறிவியல் துணையாக இருத்தல் வேண்டும் என்று கற்றறிந்த கனிவுடையன்பர்கள் கருதுகின்றனர்.

இவ்விதழைப் புரந்தருளும் தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது திருவடி மலர்கட்கு இப்புதிய ஆண்டின் தொடக்கத்தில் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவர்களது அருளாசியுடன் புதிய ஆண்டிலும் தன் முன் உள்ள அரும்பெருங் கடமைகளைப்புதிய உற்சாகத்துடன் செய்ய உறுதியெடுத்துக்கொண்டு தன் பணியைத் தொடர்கின்றோம்.

"ஞானசம்பந்தம்" இதழின் வாசக அன்பர்கள் இதனைத்தம் இயல்பான அன்பால் ஏற்றுக்கொள்வதுடன், பழக்கம்போல் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து உதவுவதோடு ஆயுள்சந்தாதாரர்களையும் சேர்த்து உதவுவார்கள் என்றும் நம்புகின்றோம்.

கட்டுரை கவிதை முதலிய பல்வேறு எழுத்து ஓவியங்களைத் தந்துதவும் அறிஞர்பெருமக்கட்கு எம் நன்றிகள். ஒவ்வோரிதழும் நம் குருமாமணியவர்கள் திருவாய் மலர்ந்த அருளாசியுரையுடன் வருவது நம் நல்வினைப்பேறு. இதன் பொருட்டு அன்புலகின் சார்பில் நம் வணக்கங்களை அவர்கள் திருவடி மலர்களில் காணிக்கையாக்குகின்றோம்.

வாழ்க ஞானசம்பந்தம்!

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த**
**பரமாசாரிய சுவாமிகள்**

சீகாழியை அடுத்த விளந்திடசமுத்திரத்திற்கு எழுந்தருளி
**ஸ்ரீ க்ஷிப்ரப்பிரசாத கணபதி திருக்கோயில்**
மகாகும்பாபிஷேகத்தை ஒட்டி நடைபெற்ற
யாகசாலை நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்து அருளிய

# ஆசியுரை

29—11—76

" என்னை நினைந்தடிமை கொண்டுஎன் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்முன் — புன்னை
விரசுமகிழ் சோலை வியன்நாரை யூர்முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான் "

**இறைவன் திருவுள்ளம் :**

விளந்திடசமுத்திரம் சீகாழியை ஒட்டி அமைந்திருக்கும் அழகிய சிற்றூர். இங்கு விநாயகர் கோயில் இல்லாதிருக்கக் கூடாது என்பது ஆண்டவன் திருவுள்ளம் போலும். விளந்திட சமுத்திரம் பண்ணை திரு. துரைராஜும், அவர் இளவல் திரு. ஹரிதாசும் முன்னரே இங்குக் குளக்கரையில் இருந்த விநாயகர்க்குத் தமது வீட்டின் முன்பக்கமாக சாலை ஓரத்தில் அனைவரும் தரிசித்துப் பயன்பெறும் வண்ணம் அழகியகோயில் எடுப்பித்து, குடமுழுக்குச் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவர்களது தலைக் கிராமமாக விளங்குவது கடைக்கண்விநாயக நல்லூர் என்பது. விநாயகநல்லூரைத் தலைக் கிராமமாகக் கொண்டுள்ள இவர்கள் தங்கள் வீட்டின் முன்பகுதியில் விநாயகப்பெருமானுக்குக் கோயில் எடுத்துக் குடமுழுக்குச் செய்வித்து வழிபடுவது பொருத்தமானதேயாகும். திரு. துரை ராஜின் தந்தையார் திரு. மருதநாயகம் பிள்ளை அவர்கள் சிறந்த பக்தர், திருக்கோயில் வழிபாட்டிலும், திருமடங்களிடத்தில்

பக்தியும் ஈடுபாடும் கொண்டவர். சுமார் 28 ஆண்டுகளுக்கு முன் நமது ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களை ஸ்ரீ சொக்கநாதருடன் தமது மாளிகைக்கு எழுந்தருளச் செய்து, வழிபட்டு மாகேசுவர பூஜை செய்வித்து மகிழ்ந்தவர். தந்தை யறிவு மகனறிவு என்பதற்கு ஏற்ப அவர் தம் குமாரர்கள் இருவரும் தந்தை வழி நின்று இத் திருக்கோயிலை அமைத்துக் குடமுழுக்குச் செய்ய முன்வந்திருப்பது பாராட்டற்குரியது.

### விரைவில் அருளும் விநாயகன் :

திரு. துரைராஜும் அவர் இளவலும் நமது தருமை ஆதீனத்தோடு தொடர்புகொண்டு, இக்குடமுழுக்கு விழாவை ஒட்டி இங்கு எழுந்தருளி யாகசாலை நிகழ்ச்சியைத் தொடங்கிவைக்க வேண்டிக்கொண்டனர். நமது திருமடத்தோடு மட்டுமின்றி காஞ்சி காமகோடி மடத்திலும் பக்தி பூண்டவர்கள். நாளை காஞ்சி காமகோடி பீடாதிபதிகளும் இங்கு வருகைதர ஏற்பாடு செய்துள்ளனர். குடமுழுக்குச் செய்யப்பெற இருக்கும் விநாயகருக்கு ஸ்ரீ க்ஷிப்ரப்பிரசாத கணபதி எனப் பெயர் சூட்டியுள்ளனர். அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருந்து இறைவன் எல்லா உயிர்களுக்கும் அருள்செய்கின்றான். தம் அடியார்களின் குறையறிந்து விரைந்து வந்து காத்தருளும் கருணை வள்ளல் இறைவன். இங்கே விநாயகருக்கு ஸ்ரீ க்ஷிப்ர பிரசாத கணபதி என்று பெயர் சூட்டியுள்ளதும் இப்பொருளில்தான் எனத் தெரிகிறது. க்ஷிப்ர - என்ற சொல்லுக்கு மிகவும் விரைவாக என்பது பொருள். பிரசாதம் - என்பது அருள். எனவே, தம்மை வழிபடும் அடியார்களுக்கு மிகவும் விரைவாக வந்து அருள் செய்யும் விநாயகப்பெருமான் இவர் என்பது இப்பெயரின் பொருளாகும்.

### க்ஷிப்ரபிரசாதகணபதி :

கடவுளைப் பூசிக்கும் அன்பர்களுடைய மனம், அவரவர்களுடைய பரிபாகத்திற்கு ஏற்பப் பலவேறு நிலைகளில் பலவேறு திருவுருவ அமைப்பில் ஈடுபடுகின்றது. இவ்வாறான ஈடுபாடு எல்லா இன்பங்களையும் அளித்து உய்விக்கின்றது. விநாயகப் பெருமானின் திருவுருவமும் அன்பர்களுக்காக முப்பத்திரண்டாகப் போற்றப்பெறுகின்றது. இவற்றுள் ஒன்றே க்ஷிப்ர பிரசாத கணபதி என்பது. முத்கலபுராணம் என்னும் வடநூல் இவ்வாறான முப்பத்திரண்டு வகை விநாயகர் திருவுருவங்களின் அமைப்பினை விளக்குகின்றது. க்ஷிப்ர பிரசாதகணபதியின் திருவுருவ அமைப்பு மிகஅழகானது. பேழை வயிற்றினையும் துதிக்கை

உட்பட ஏழுதிருக்கரங்களையும் கொண்ட இவர், திருவாபரணங்களை நிறையப்பூண்டு காட்சியளிப்பவர். துதிக்கையால் மாதுளம் பழமும் ஏனை வலக்கைகளில் முறையே அங்குசம், தாமரைப்பூ, கருப்பை ஆசனம் தாங்கியும், இடக்கைகளில் பாசம், கற்பகக் கொடி வரதம் இவற்றோடும் காணப்படுகின்றார். இத்திருவுருவங்களில் க்ஷிப்ரகணபதி என்பதொரு வகையும் உண்டு. இவ்வுருவம் ஐந்து கரங்களையும், அவற்றில் முறையே தந்தம் கற்பகக்கொடி, பாசம், ரத்னகும்பம், அங்குசம் என்பவற்றைக் கொண்டும் விளங்குகின்றது.

## அடியார்க்கு எளியவர் :

நாயகன் – என்ற சொல்லுக்குத் தலைவன் என்பது பொருள். விநாயகன் – என்பதற்குத் தனக்குமேல் வேறு ஒரு தலைவன் இல்லாதவன் என்று பொருள் கூறுவர். விநாயகர் முதலிய எல்லா மூர்த்திகளும் பரமேஸ்வரனுக்கு உட்பட்டவர்களே. விநாயகர் வேறு பரமேஸ்வரன் வேறல்ல. பரமேஸ்வரனே மூலசக்தியாக விளங்குகின்றார். ஒரே மின்சக்தி காற்றாக, ஒளியாக, ஒலியாக, நெருப்பாக வெவ்வேறு வகையில் பயன் தருதல்போல பரமேஸ்வரன் திருவருள் விநாயகர் வாயிலாகவும் வியாபிக்கின்றது.

## இறைவன் கருணையும் நமது தகுதியும் :

விநாயகர் மக்கள் எல்லோரும் வணங்கத் தக்கவராக விளங்குகின்றார். குளத்தங்கரை, ஆற்றங்கரை அரசமரத்தடி, கோயில், வீடு இங்கெல்லாம் எழுந்தருளியிருந்து எளிமையாக அருள் பாலிக்கின்றார். எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் விநாயகரை வணங்கித் தொடங்கவேண்டுமென்பது நமது மரபாக இருந்து வருகிறது. அப்பெருமானை வணங்கித் தொடங்கினால் இடையூறுவராது. வந்தாலும் உடன் நீங்கிவிடும் என்பது நமது சமய உண்மையாகும். வணங்கினாலும் சில சமயத்தில் இடையூறு வருகிறதே என்று எண்ணுபவர்களும் உண்டு. பெரிதாக வர இருந்த இடையூறு விநாயகப்பெருமானை வணங்கிய பின்னர் சிறிதாயிற்று என்று கருதவேண்டும். இவ்வாறு வணங்கி உய்தி பெற மாட்டாதவர்களைக் கரைசேர்க்கவே பெருமான், எளிவந்த கருணையுடன் திருவீதியில் எழுந்தருளி வருகிறான். வணங்கிப் பேறுபெறும் நல்வினை இல்லாதவன் அப்போதும் எழுந்துவந்து வணங்காது, திரும்பிப் படுத்து உறங்கித் திருவருளை இழக்கின்றான். உயிர்கள் பல பிறவி எடுத்து, கொஞ்சம் கொஞ்சமாகவே வளர்ச்சி பெற்று

இறைவன் திருவடியை எய்துகின்றன. சிலர் வணங்கி உய்தி பெற வில்லையே என நினைக்க வேண்டியதில்லை. அப்படி வளர்ச்சியடையாத உயிர்கள்தான் வணங்கத் தவறுகின்றன. இறைவனை வணங்கவேண்டுமாயினும் அதற்கும் அவன் திருவருள் இருக்கவேண்டும். கொடிய வினை செய்தவர்களைத் திருவருள், தம்மை வணங்குதற்குக்கூட அருகில் அனுமதிக்காது. உதாரணமாக முதல் வகுப்பில் படிக்கும் மாணவனை, ஆசிரியர் எவ்வளவு திறமை உடையவராக இருந்தாலும், திடீரென எம். ஏ., பட்டதாரியாக்கிவிட முடியாது. அதுபோல இறைவனை வணங்கும் பக்குவமும், பலகாலம் நல்வினை இயற்றினோர்க்கே கைகூடும்.

## சமய அடிப்படையில் சமுதாயம் :

சமூகம், அதன் அமைப்பு, அரசியல் நெறி முறைகள் எல்லாம் நமது சமய வழிபாட்டு முறைகளைப் பின்பற்றியனவே என்பது நன்கு சிந்திப்பவர்க்குப் புலனாகும். நமது ஜன நாயகத்தில் எல்லா அதிகாரங்களும் ஜனாதிபதியிடமே உள்ளன. அவரே நேரில் வந்து ஒவ்வொரு காரியத்தையும் இயற்றுதல் இல்லை. அவர் தமது அதிகாரத்தைப் பிரதமருக்கு வழங்குகின்றார். அவரிடமிருந்து - கவர்னர் - கலெக்டர் - தாசில்தார் - கிராம அதிகாரி என அதிகாரம் பலரிடத்தும் வருகின்றது. கிராம அதிகாரியின் அதிகாரமும் ஜனாதிபதியின் அதிகாரமே என்பது நன்கு நோக்குவார்க்குப் புலனாகும். அரசில் ஒரு காரியம் நடைபெறவேண்டுமானால் கீழிருந்து ஒவ்வோர் அதிகாரியின் துணையோடு மேலே போய்க் காரியத்தை நிறைவேற்ற வேண்டியுள்ளது. அதுபோலப் பரமேஸ்வரனின் அதிகாரத்தினை நிறைவேற்றும் மூர்த்திகளுள் விநாயகப் பெருமான் முக்கியமானவர். நேரே மேலதிகாரிகளைச் சந்தித்தால் சந்திப்பவரது தகுதி நோக்கித் தாமே உத்தரவிடுவதும் உண்டு. அல்லது தமது கீழ் அதிகாரிகள் வழியாக முடிவு செய்வதும் உண்டு. அதுபோல, நமது, தகுதிக்கும், தன்மைக்கும் தக அமைக்கப்பெற்றிருக்கும் வழிபாட்டு முறைகளைப் பின்பற்றி, நாம் மேலே வளர்ச்சிபெற்றுச் சிறத்தல் வேண்டும்.

## வேறு ஒரு சான்று :

சமய சம்பிரதாயங்களிலிருந்தே சமுதாய நடைமுறைகள் உருவாயின என்பதற்கு இன்னொரு தொடர்பினையும் எண்ணிப் பார்க்கலாம். ஒருவர் கவர்னராக நியமிக்கப்பெற்றால் உடனே கவர்னருக்கு உரிய அதிகாரத்தினைப் பெற்றுவிடுவதில்லை.

உரியவர்களிடம் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட பின்னரே அவ்வதிகாரம் அவரிடம் வருகிறது. இம்முறை நமது சமயத்தின் அடிப்படையிலிருந்ததே. உதாரணமாக குளத்தடியில் இருந்த விநாயகரின் அருள் ஆற்றலை இப்போது கும்பத்தில் ஆவாகனம் செய்திருக்கிறோம். புதிதாகக் கட்டியிருக்கும் கோயிலில் விநாயகர் திருவுருவத்தை எழுந்தருள்வித்து, கும்பத்தில் வைத்து யாக சாலையில் பூசித்த புனித நீரால் அபிடேகித்தபின் விநாயகரிடம் அருள் ஆற்றல் சேர்வதாக நமது வேத - ஆகமங்கள் குறிப்பிடு கின்றன. இதைத்தான் உலகியலில் பதவிப் பிரமாணம் என்ற சடங்கின் வழி நிகழ்த்துகின்றனர்.

## பிழைபொறுக்கும் பெம்மான் :

க்ஷிப்ரப்பிரசாத விநாயகர் என்பதற்கு மிக விரைவில் வந்து அருள் செய்பவர் என்று பொருள் கண்டோம். விரைவில் வந்து அருளுதல் என்பது நமது தவறுகளையும், குறைகளையும் விரைவில் மறந்து மன்னித்து அருளுதல் என்பதே கருத்து. நமது செயல்களில் குணங்களை விடக் குறைகளே மலைபோல் உள்ளன. இவற்றிற்கெல்லாம் தண்டனை தராது மன்னித்து அருளும் விநாயகப் பெருமானின் கருணையினையே இச்சொல் விளக்குகின்றது. யாவராயினும் குற்றமே செய்யாதிருப்பவர் என்போர் உலகத்துச் சிலரே. குற்றத்தைக் குற்றமென உணர் வதும், உணர்ந்தபின், இறைவன்முன் மன்னிப்பு வேண்டு வதுமே நாம் செய்யத்தக்கது. இறைவன் பிழை உணர்ந்து மன்னிப்பு வேண்டுவோரை மன்னித்து அருளுகின்றான். சாதாரணமாக உலகியலில், ஒருவன், தன் பிழை உணர்ந்து வேண்டினால் தந்தை மன்னிக்கின்றான். ஒரு பிறப்பில் வந்த தந்தை, தன் மகனின் பிழையை அவன் உணர்ந்து வேண்ட மன்னிப்பாரானால், எல்லாப்பிறப்பிலும், எல்லா உயிர் களையும் தாயும், தந்தையுமாக நின்று காத்தருளும் இறைவன் மன்னித்தருளுதல் வியப்பில்லைஎன்பது புலனாகும். இறைவனுக்கே ஆசுதோஷி என்ற ஒரு பெயருண்டு. விரைவில் நமது குற்றங் களை மன்னித்து மகிழ்ச்சியடைபவர் என்பது அதன் பொருள்.

## பரிவார பூஜைகள் :

இறைவனது வடிவத்தை மூன்றாகப் பகுத்துக் கூறுவர். வேக வடிவம், போக வடிவம், யோக வடிவம், என்பன அவை. திருச்செந்தூர் முருகன், ஸ்ரீ சட்டைநாதசுவாமி வேக வடிவம். வள்ளி - தெய்வானை சமேத சுப்ரமண்யர் போகவடிவம்.

ஸ்ரீ தட்சணாமூர்த்தி, ஸ்ரீ தண்டாயுதபாணி யோகவடிவம், நமது இயல்புகளுக்கும், எண்ணங்களுக்கும் ஏற்ப இத்தகுவடிவங்களை வழிபட்டு அருள்பெறல் வேண்டும். நமது தகுதிக்கேற்பவே மாரியம்மன், காளியம்மன் முனீஸ்வரன், ஐயனார், இருளன், காட்டேரி முதலிய கிராம தேவதை வழிபாடுகளும் அமைந்துள் ளன. கீழிருந்தே படிப் படியாகப் பரமேசுவரனிடம் செல்லுதல் வேண்டும். நமதுகோயில்களில் இன்றும் அஷ்டதிக்கு பாலகர்கள் விநாயகர், பரிவாரங்கள், இவற்றின் பூஜைகள் முடிந்தபிறகே பரமேசுவரன் பூஜை நடைபெற்றுவருதலைக் காணலாம். எனவே பலதெய்வ வழிபாடு ஏற்படுவதற்குக் காரணம் மக்கள் பலதரப் பட்ட தகுதியினராயிருப்பதே. இருப்பினும் பல தெய்வவுருவங் களிலும் இடையீடின்றிக் கலந்து நின்று அருள்பாலிப்பவர் சிவபரம்பொருளே என்பதை உணர்தல்வேண்டும்.

## திருவருளின் விரிவு :

மக்களின் தேவைகளுக்கு ஏற்ப அவ்வக்காலத்தில் புதிய புதிய ஆட்சிப் பிரிவுகளை அரசு ஏற்படுத்துகின்றது. இவ்வா றுன பிரிவுகளை மதித்தலும், அவற்றிற்குக் கட்டுப்படுதலும் நமது கடமை. இவை முன்பு இருந்ததில்லை என்று இவற்றைப் புறக்கணிக்க இயலாது. இதுபோல அவ்வக்காலத்தில் புதிதாக அமையும் மூர்த்திகளையும் வழிபாட்டு முறைகளையும் நாம் ஏற்று வழிபட்டு உய்தி பெறுதலே அறிவுடைமையாகும். புதிதாக அமைந்த வழிபாடு ஒன்றினை, இவ்வழிபாடு தொன்மையானது இல்லை என்று ஆராய்வதோ, மறுப்பதோ நமது அறியாமை யைக் காட்டுவதோடு திருவருளின் வியாபகத்தினைப் புரிந்து கொள்ளாத முறையாகவும் அமையும்.

## மின்னாற்றலும் அருளாற்றலும் :

விளந்திட சமுத்திரத்தில் தற்போது கோயிலைக்கட்டி இச் சகோதரர்கள் குடமுழுக்குச் செய்விக்கின்றனர். குடமுழுக்கு நடத்துவது மட்டும் போதாது. ஒரு காலமோ, இரண்டு காலமோ தவருது பூஜை நடைபெறச் செய்யவேண்டும். அப் பொழுதுதான் சுபிட்சம் நிலவும். கோயில்கள் மின்னாற்றல் நிலையங்கள் ( Power Station ) போல்வன. ஆயின் மின்னாற்றல் ஜடசக்தி, அறிவற்றது; அது நலமும் பயக்கும்; தவறு செய்தால் தண்டித்தும் விடும். ஆனால் இறைவனது ஆற்றல் அருட் சக்தி; அறிவுள்ளது. பிழை செய்தாலும் பொறுத்து அருளுவது. மின்னாற்றல் நிலையங்களில் சில பல பணியாளர்கள் மின்னியற் பொறியாளர்கள் விதித்தபடி இடையருது பணியாற்றி வர வேண்டும். அப்பொழுதுதான் மின்னாற்றல் பெருகி ஒலியாகவும்,

நெருப்பாகவும் காற்றாகவும் உலகியலுக்குப் பயன்தரும். அது போல அருளாற்றல் நிலையங்களாகத் திகழ்கின்ற திருக்கோயில் களில், சிவாச்சாரியர்கள் போன்ற புனிதர்கள், வேதாகமங்களின் விதிப்படி, பூஜை முதலிய நியமங்களை இடையறாது செய்து வருவார்களானால் அருளாற்றல் பெருகி சமுதாயம் இம்மைக்கண் நலம் பெற்றுச் சிறப்பதோடு அம்மையாகிய வீடு பேற்றிற்கும் அவ்வருளாற்றல் துணையாகும். அதனால் எல்லாமே இறைவன் அருளால் வந்து விடுமென்று கருதி முயற்சியின்றி இருத்தல் கூடாது. முறையாகத் திட்டமிட்டு என்றும் நாம் உழைத்து வரவேண்டும். இறைவன் அருள் நமது முயற்சிகளுக்குத் துணையாகும். மனித ஆற்றலால் இயலாததனை நேரமறிந்து அவன் வழங்குவான் பலநாள் வறட்சியைச் சிலநாளில் மழையாகப் பெய்வித்து நீக்கிய இறையருளை நினைந்து போற்ற வேண்டும்.

### வழிபட்டு உய்வோம் :

கடவுளை நம்புதல் வேண்டும். முழுதும் தத்துவம் தெரியாவிடினும், முன்னோர் நெறிநின்று வழிபட்டாலும் போதும். அங்ஙனம் வழிபட்டால் துன்பம் வராது. அப்படி வந்தாலும் அதுவும் ஏதோ ஓர் நன்மைக்கே என்று கருதவேண்டும். விநாயகப்பெருமானுக்குப் பதினாறு திருநாமங்கள் உண்டு. அன்பொடு அவற்றைக் கூறி ஒவ்வோர் மலர் இட்டுப் பூசித்து நமது அலுவல்களில் ஈடுபடலாம். இயன்றவர்கள் சிறுதொகை செலவில் உரிய சிவாசாரியர் வழியாக கணபதி ஹோமம் செய்வித்துத் துன்ப நீக்கம் பெறலாம். இவ்வாறு அருள் வழங்கும் விநாயகப் பெருமானுக்குப் புதிய திருக்கோயில் எடுத்து குடமுழுக்கு நிகழ்த்துவது, இப்பகுதியில் வாழும் அனைவருக்கும் பெருவாய்ப்பாகும். இவ்வாய்ப்பினை வழங்கிய திரு. துரைராஜ் திரு. ஹரிதாஸ் சகோதரர்களுக்கும் அவர்தம் குடும்பத்தார்க்கும் இப்பணியில் ஈடுபட்டுள்ள அனைவர்க்கும் எல்லா நலன்களும் பெருகச் செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagateswaraswamy Devasthanam, Tirukkadaiyur.

A great temple with great traditiars. I enjoyed an hour of useful and benifiting times.

(Sd.) A. A. R. Prabhu,

25—11—76.

Commissioner of Income Tax,
Madras.

உ

குருபாதம்

# "புத்தாண்டு வாழ்த்து"

( ஞானசம்பந்தம் - முப்பத்தாருவது ஆண்டு )

புலவர். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ.,

ஆருறு தத்துவமாம் படிகள் தாண்டி
ஆணவத்தை விட்டொழித்து ஆசை அற்ருல்,
பேராறு சடைக்கணிந்த பெம்மான் தாள்கள்
பெற்றிடுதல் கூடுமெனப் பேசும் நூல்கள்!
தாய்க்கருணை பூண்டிந்தத் தரணித் தன்னைத்
தாங்குதற்கு அவதரித்த ஞான வள்ளல்!
குவிந்தபுகழ் குருஞான சம்பந் தப்பேர்க்
கொடைவள்ளல் திருநாமம் தன்னைப்பூண்டு,
ஏழைந்து ஆண்டுகளாய் மக்கள் நெஞ்சில்
இறையன்பைப், பண்பாட்டை. ஒழுக்கந் தன்னை,
ஆழமுற விதைத்திட்டு அன்பாம் நீரால்
ஆர்வமெனும் பயிர்வளர்த்து, பக்திப் பூக்கள்
அலர்வதற்குத் தொண்டாற்றி அடக்கத் தோடு
அமைதிநடை போடுகின்ற அன்பு ஏடு!
ஞானசம் பந்தத்தால் உயிர்கள் தம்மை
நன்ருகப் பிணைத்திட்டு மெல்ல மெல்ல
ஏழைந்து படி உயரச் செய்த ஏடு
எடுத்து அடி வைப்பதுவோ முப்பத் தாறு!
தத்துவமாம் படிகடந்து சிவனுர் தாள்கள்
தரிசிக்கத் தொடர்கின்ற பயணம் தன்னை
அற்பணிக்கும் நல்லேட்டைத் தொடர்ந்து வந்து
அருள்பெறுதல் எளிதாகும்! அன்பே மிக்கீர்!
புதுப்பயணம்! வாருங்கள்! ஞான ஏடு
போக்கறிந்து பின்தொடர்வீர்! வாழ்வீர் நன்றே!

# வாரியார் வாக்கு

உலகத்தில் உள்ள ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு லட்சணம் அதாவது இலக்கணம் உண்டு. பெண்ணுக்கு இலக்கணம் நாணம். ஆணுக்கு இலக்கணம் வீரம். அரசியல் தலைவனுக்கு இலக்கணம் நேர்மை. சொற்பொழிவாளருக்கு இலக்கணம் சொல்லும் செயலும் ஒத்திருப்பது. அதுபோல கடவுளுக்கு இலக்கணம் பிறப்பு இல்லாமை.

* * * *

சிவனுக்கு பிறப்பு இறப்பு இல்லாத காரணத்தினால்தான் கிருஷ்ண ஜெயந்தி, ராமஜெயந்தி கொண்டாடுவதுபோல் சிவ ஜெயந்தி கொண்டாடுவது இல்லை. அதுபோல சுப்பிரமணிய ஜெயந்தியும் கொண்டாடுவது இல்லை.

உலகத்துப் பொருள்கள் எல்லாவற்றிலும் சிவம், சக்தி, விநாயகர், முருகன் இந்நான்கும் அடங்கியிருக்கின்றன. நெருப்பை சிவம் என்றால் அதிலுள்ள சூடு சக்தியாகும். செம்மை விநாயகர். ஒளி முருகன். இதிலிருந்து சிவம், சக்தி, விநாயகர், முருகன் எல்லாம் ஒன்றே பலவாயின என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். பெருமாளைப்பற்றிச் சொல்லவில்லையே என்கிறீர்கள். பெருமாள் சக்தியில் அடக்கம்.

* * * *

கடவுள் இல்லை என்றோ, கடவுளை முட்டாள் என்றோ, கடவுளை நிந்தித்தோ ஒருவன் எவ்வளவு தூற்றினாலும் அதை அவர் லட்சியம் செய்ததில்லை. ஆனால் கடவுள் பக்தனுக்கு ஒருவன் தீங்கு நினைத்தால் அவர் பொறுக்க மாட்டார். சூரியனின் உஷ்ணத்தை நாம் தாங்கமுடியும். ஆனால்சூரியனின் வெப்பத்தைத் தாங்கும் பொடிமணலின் உஷ்ணத்தை நாம் கால்களால் தாங்க முடியாது. அதுபோல பிரகலாதனுக்கு இழைத்த கொடுமையைத் தாங்கமுடியாமல்தான் கடவுள் நரசிம்மாவதாரம் எடுத்தார்.

— நன்றி — தினமலர் 9—12—76.

தருமையாதினம் 25 ஆவது குருமகாசந்நிதானம்



இருபத்தா றரையாண்டு இவ்விதழை வளர்த்திட்ட
குருகயிலைச் சுப்ரமண்ய குரவரது அருளுருவம்

# தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர், வித்துவான்,
திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

## 1. திருஓமாம்புலியூர்

இத்தலம் சோழவள நாட்டில் காவிரியின் வடகரைத் தலங்களில் 31-வது தலமாக விளங்குவது. தென்னுர்க்காடு மாவட்டம் சிதம்பரம் தாலுகாவில் கொள்ளிடத்தின் வட கரையில் உள்ளது. சிதம்பரத்திலிருந்து காட்டுமன்னுர்குடி சென்று அங்கிருந்து 7 கிலோமீட்டர் தூரம் மேற்குநோக்கிச் சென்ருல் இத்தலத்தை யடையலாம். சிதம்பரத்திலிருந்து பஸ்வசதியுள்ளது. மாயூரம் - மணல்மேடுக்கு அருகில் பாப்பாகுடி கொள்ளிடத் துறையிலிருந்து கொள்ளிட நதியிலிறங்கி நடந்தும் செல்லலாம். கோடைக்காலத்திற்கு மட்டும் இவ்வழி ஏற்றதாகும். நதியில் தண்ணீர் உள்ள காலங்களில் இவ்வழி பொருந்தாது.

புலிக்கால் முனிவர் என்னும் வியாக்ரபாத முனிவர் பூசித்த பெரும்பற்றப்புலியூர், ஓமாம்புலியூர், பெரும்புலியூர் எருக்கத்தம்புலியூர், திருப்பாதிரிப்புலியூர் என வழங்கும் புகழ்பெற்ற ஐந்து புலியூர்களில் இத்தலமும் ஒன்ருகும். இத்தலத்திற்கு ஞானசம்பந்தர் பதிகம் ஒன்றும், அப்பர் பதிகம் ஒன்றும், ஆக இரண்டு திருப்பதிகங்கள் உள்ளன. உமையம்மைக்கு இறைவன் தக்ஷிணுமூர்த்தியாக இருந்து பிரணவப்பொருளை உபதேசித்த சிறப்புடையது. புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதர் பூசித்த தலமாதலின் புலியூ ரென்று பெயர் வழங்குகிறது. பாதிரிப்புலியூர் பெரும்பற்றப் புலியூர் என்பவைகளைப்போலவேறுபாடுதோன்ற வேள்விச் சிறப்பினையுடைய என்னும் பொருளில் ஓமமாப்புலியூர் என் னும் அடைமொழிகொடுக்கப்பெற்று ஓமாம்புலியூர் என்னும் பெயர் எய்திற்று. தேவாரத்தில் அந்தணர்பலரும் ஆகுதி வேட்கும்சிறப்புக்கூறப்படுதலைக் காணலாம். ஞானசம்பந்தர் தேவாரத்தில் ஓமமாம்புலியூர் என்றும், அப்பெயரே மருவி

அப்பர் தேவாரத்தில் ஓமாம்புலியூரென்றும் வழங்கப்படுகிறது. உமையம்மைக்கு ஓம் என்னும் பிரணவப் பொருளை உபதேசித்த தலமாதலின், ஓம் ஆம்புலியூர் எனப் பெயர் பெற்றதென்றும் கூறப்படுகிறது.

இறைவன் திருப்பெயர் – அருள்மிகு துயர்தீர்த்தநாதர்; பிரணவபுரீசுவரர் எனவும் வழங்கப்பெறுகிறார். இறைவி திருப்பெயர் – அருள்மிகு பூங்கொடிநாயகி தலமரம் – இலந்தை. தீர்த்தம்-கௌரி தீர்த்தம் (சந்நிதியில் உள்ளது) வடபுறம் – வரதனுங்குட்டை. தென்புறம் – கொள்ளிடப் பேராறு ஆகிய மூன்றுதீர்த்தங்கள் உள்ளன. கோயிலுக்குக் கீழ்ப் பக்கத்தில் கௌரி தீர்த்தக் கரையில் தனியே ஒரு சிவாலயம் உள்ளது. சிவலிங்கம் பெரிய திருவுருவம். அம்பிகை திருவுருவும் உள்ளது.

## கோயிலமைப்பு :

கிழக்கு நோக்கிய திருக்கோயில். எதிரே கௌரி தீர்த்தம் விளங்குகிறது. முன் வாயிலில் பலிபீடம் நந்தி மண்டபம் வாகன மண்டபங்கள் உள்ளன. அவற்றைக் கடந்து உள்ளே செல்லும் முதல் வாயிலை மூன்று நிலைக் கோபுரம் அணிசெய்கிறது. கோபுரத்தைக் கடந்து பிராகாரத்தை வலமாக வருவோமாயின் தென்கிழக்கு மூலையில் மடைப்பள்ளி உள்ளது. தெற்குப் பிராகாரத்தில் அர்த்த மண்டப கர்ப்பக்கிருகக் கோஷ்டங்களில் விநாயகர், நடராஜா, தக்ஷிணாமூர்த்தித் திருவுருவங்கள் உள்ளன. வியாக்ரபாத முனிவருக்குக் காட்சி கொடுத்த நிலையில் நடராஜர் கற்சிலை வடிவில் காட்சி தருகிறார். மேற்குப் பிராகாரத்தில் திருமாளிகைப் பத்தி மண்டபம். மும்மூர்த்தி விநாயகர், ஆறுமுகர், மகாலக்ஷ்மி திருவுருவங்கள் உள்ளன. கர்ப்பக்கிருகக் கோஷ்டத்தில் லிங்கோற்பவர் உருவம் உள்ளது. வடக்குப் பிராகாரத்தில் தலமரமாகிய இலந்தை மரம் உள்ளது. அதன்கீழ் அம்பிகை தவம்செய்யும் உருவம் உள்ளது. கோஷ்டங்களில் பிர்மா, துர்க்கை திருவுருவங்கள் உள்ளன. சண்டிகேஸ்வரருக்குத் தனிக் கோயிலுள்ளது. அம்பாள் கோயில் கோஷ்டங்களில் வாமை சேஷ்டை முதலிய நவசக்திகளின் உருவங்கள் விளங்குகின்றன.

கோயிலின் முன்மண்டபத்தைக் கடந்து அர்த்தமண்டபத்தை அடைந்து சுவாமிசந்நிதியை அடையலாம். துவாரபாலகர் இருபுறம் காவல்செய்ய சுவாமி சுயம்புமூர்த்தியாக

உயர்ந்த திருவுருவத்தோடு விளங்குகின்றார். இறைவன் உமையவளோடும் விரும்பியுறையும் ஓமாம்புலியூர் வடதளிக் கோயில் என்று ஞானசம்பந்தர் அருளிச்செய்துள்ள பாடல்களும், அப்பர் சுவாமிகள் 'எம் செல்வன்' என்று உரிமையோடு பாராட்டி இவ்விறைவனை வழிபடாது பலநாட்கள் கழித்தேனே என்று இரங்கிப் பாடும் பாடல்களும் நம் நினைவிற்கு வருகின்றன.

சுவாமியைத் தரிசித்து திருஇடைநாழிகையைக் கடந்து மகாமண்டபத்தை அடைந்தவுடன் தென்முகம் நோக்கி சபையில் தக்ஷிணாமூர்த்தி விளங்குவதைக் காணலாம். சுவாமி சந்நிதியை அடுத்த அர்த்தமண்டபத்தில் பாதுகாப்பாக விநாயகர், சோமாஸ்கந்தர், அம்பாள், சுப்பிரமணியர், நடராஜர், தக்ஷிணாமூர்த்தி, பிக்ஷாடனர் உற்சவத் திருவுருவங்கள் வைக்கப்பெற்றுள்ளன. இத்திருக்கோயிலில் தக்ஷிணாமூர்த்தி சந்நிதி சிறப்புடையது. மகாமண்டபத்தில் நடராஜர் சபையில் பெரிய திருவுருவமாக தக்ஷிணாமூர்த்தி திருவுருவம் விளங்குகிறது. உமையம்மைக்கு ஓங்காரத்தின் உட்பொருளை உணர்த்தியருளிய மூர்த்தி இவர். இவரை வழிபட்டு முன்மண்டபத்தை அடைகின்றோம். முன்மண்டபத்தில் தெற்குமுகமாக அம்பாள் சந்நிதி விளங்குகின்றது. அம்பாள் பூங்கொடிநாயகி என்ற பெயருக்கேற்ப எழில் மிக்க பெரிய திருவுருவோடு காட்சி அளிக்கின்றார்.

முன்மண்டபத்தில் இத்திருக்கோயிலின் சிறப்பை விளக்கும் இரு ஐதீகச் சிற்பங்கள் சுவாமி சந்நிதியின் இருபுறமும் விளங்குகின்றன. இவை படைப்புச்சிற்பங்களாகும்.

ஒருபுறம் இறைவன் சலந்தராசுரனைக் கொல்வதற்குத் திருமாலுக்குச் சக்கராயுதம் வழங்கிய நிகழ்ச்சி செதுக்கப் பெற்றுள்ளது. சலந்தரன் அழியா வரம் பெற்று திருமால் பிரமர்களை அடிமையாகக்கொள்வதும், இறைவன் அவனை இருகூறாகப் பிளக்கும் சக்கராயுதம் அளித்த நிகழ்ச்சியும் மிக அழகாகச்செதுக்கப்பெற்றுள்ளன. இத்தலத்தேவாரத் திருப்பதிகப் பாடலிலும் இவ்வரலாற்று நிகழ்ச்சி வருதல் குறிப்பிடத்தக்கது.

" சம்பரற் கருளிச் சலந்தரன் வீயத்
தழலுமிழ் சக்கரம் படைத்த
எம்பெரு மானார் இமையவ ரேத்த
இனிதினங் குறைவிடம் வினவில்

அம்பர மாகி அழலுமிழ் புகையின்
ஆகுதி யால்மழை பொழியும்
உம்பர்கள் ஏத்தும் ஓமமாம் புலியூர்
உடையவர் வடதளி யதுவே." – சம்பந்தர்.

மற்றொருபுறம் ஐந்து புலியூர்களில் ஐந்து சிவலிங்க உருவங்களை ஐவர் பூசித்துப் பேறுபெற்ற நிகழ்ச்சி செதுக்கப் பெற்றுள்ளது. பெரும்பற்றப்புலியூர் என்னும் சிதம்பரத்தில் சிவகாமி அம்மையும், ஓமமாம்புலியூரில் வியாக்ரபாதரும், இவ்வாறே ஏனைய தலங்களிலும் வழிபட்டோர் உருவங்கள் செதுக்கப்பெற்றுள்ளன. கோயில் மிகவும் பழுதடைந்துள்ளது.

## புராண வரலாறுகள்

### அம்பிகைக்குப் பிரணவப்பொருள் அருளியது :

இறைவனைக்குறித்து அம்பிகை இத் தலத்தில் இலந்தைமரத்தின்கீழிருந்து தவம் இயற்றினாள். இறைவன் அம்பிகைக்கு அருட்காட்சி வழங்கி, 'யாது குறித்துத் தவம் செய்கின்றாய் ?' என்று கேட்கின்றார். அம்பிகை காரணம், காரியம், தூலம், சூக்குமம், மூக்தி என்ற பஞ்சாட்சரங்கள் ஐந்தனுள் முக்தி பஞ்சாட்சரத்திற்கு மூலகாரணமாய் விளங்கும் அகார உகார மகாரமாகிய பிரணவத்தின் உட்பொருளை உபதேசிக்கவேண்டுமெனக் கேட்கச் சிவபிரான் தக்ஷிணாமூர்த்தியாகத் தோன்றி எழுந்தருளியிருந்து அம்பிகைக்கு முக்தி பஞ்சாக்ஷரமாகிய பிரணவத்தின் உட்பொருளை உபதேசம் செய்தார். அதனால் சுவாமிக்கு ஸ்ரீ பிரணவபுரீசுவரர் என்றபெயர் உண்டாயிற்று.

### புலிக்கால் முனிவர் பூசித்தது :

வியாக்கிரபாத முனிவர் இத்தலத்து இறைவனை வழிபட்டு அருள்பெற்றார். பால முனிவர் என்ற பெயருடைய இம்முனிவர் சிவபூசையின் பொருட்டுக் கொய்யும் மலர்கள் பகற்காலத்தில் வண்டுகளின் எச்சிற் படுகின்றனவே என்று வருந்திச்சிவபிரானிடம் புலிக்கண்ணும் புலிக்காலும் வேண்டிப் பெற்றார். தில்லை வனத்தில் இரவிற் சென்று மலர் கொய்து வைத்துப் பகல்முழுவதும் பூசை செய்பவர். இக்காரணம் பற்றியே இவர் வியாக்ரபாதர் எனப்பெற்றார். இம்முனிவர் சிதம்பரத்தில் நடராசப் பெருமானைத் தரிசித்தற் பொருட்டுத் தலயாத்திரையாக வரும் வழியில் இத்

தலத்திற்கருகில் வரும்போது வழிமாறித் திகைத்துநின்ருர். பகற்பொழுதுகழிந்து மாலைநேரம்வந்தது. சிதம்பரேசனைத் தரிசிக்கும் பெருவேட்கைகொண்டு வந்த முனிவர்க்கு ஆராமை தோன்றிற்று. நடராஜப் பெருமானை மனத்தால் தியானித்து நின்ருர். சிவபெருமான் அசரீரியாக இங்குள்ள எம்மைப் பூசித்தால் சிதம்பர தரிசனத்தை இத்தலத்திலேயே தருகின்ரேம் என்று கூறினர். முனிவர் அவ்வாறே துயரம் தீர்த்த பெருமானைப் பூசித்து வழிபட்டார். இறைவன் நடராஜ மூர்த்தியாகக் காட்சி அளித்தார். அத்திருவுருவம் தெற்குப் பிராகாரத்தில் உள்ளது. கற்சிலை உருவத்தில் நடராஜர் அமைந்திருப்பது அருமையாகவே காணுதற்குரியதாம். புலிக்கால் முனிவர் பூசித்தமையால் புலியூர் என இத்தலம் பெயர்பெற்றது.

## வேடன் செய்த வில்வ பூசை :

இத்தலம் பதரிகாரண்யமாக (இலந்தை மரக்காடாக) இருந்த ஒரு காலத்தில் வேட்டையாடிக்கொண்டுவந்த வேடன் ஒருவன் புலிக்குப் பயந்து இங்குள்ள வில்வமரமொன்றில் ஏறிக்கொண்டான். இரவுப் பொழுது வந்தது. புலி அவ்விடத்தை விட்டு அகலாமல் நின்றது. வேடன் உறக்கம் வராமல் இருப்பதற்காக வில்வ இலைகளைப் பறித்துப் போட்டுக்கொண்டிருந்தான். அன்று மகா சிவராத்திரி. வில்வ மரத்தடியில் துயரந் தீர்த்தநாதர் சிவலிங்கத் திருவுருவில் கீழே எழுந்தருளியிருந்தார். இரவு முழுவதும் உறங்காமல் வேடன் பறித்துப் போட்ட வில்வ இலை அவருக்கு அருச்சனையாயிற்று. மகாசிவராத்திரியில் நான்கு யாமத்தும் உறங்காமல் பூசைசெய்த பலன் வேடனுக்குக் கிடைத்தது. வேடனுக்கும் புலிக்கும் இறைவன் விடுபேறளித்தார்.

கொலைத்தொழில் புரியும் புலிக்கும் வேடனுக்கும்
கூறரும் பெரும்பதம் அளித்த
நிலாவுலா வியசெஞ் சடையனே! மணியே!
நின் திரு வடிமலர் அருள்வாய்
புலவர்கள் புகழ்ஓ மாம்புலி யூர்வாழ்
பூங்கொடி நாயகி பாகா!
சிலைமலிகரத்தாய்! துயர்தீர்த்த நாதா!
செல்வமே கருணை வா ரிதியே.

என்ற பாடல் இவ்வரலாற்று நிகழ்ச்சியை உணர்த்துகிறது.

## தொழுநோய் நீங்கியது :

சதானந்தன் என்ற அரசன் தொழுநோய் ஏற்பட்டு மிகவும் வருந்தி இத்தலத்திற்கு வந்து இறைவனை வழி பட்டு வரதனுங்குட்டை என்று வழங்கும் வரந்தரும் தீர்த் தத்தில் நீராடி நாடோறும் வடதளி இறைவனை வழிபட்டு தொழுநோய் நீங்கப்பெற்றான்.

## கந்தர்வர் சாபம் தவிர்த்தது :

கந்தர்வர் இருவர் தேவலோகத்தில் ஏற்பட்ட சாபத் தினால் இவ்வூரில் ஒருவர் தாசியாகவும்; ஒருவர் பன்றியாக வும் உலாவலுற்றார்கள். இருவரையும் புலியொன்று துரத் திற்று. இருவரும் கொள்ளிட நதியில் இறங்கியோட முற் பட்டனர். அத்தீர்த்த விசேடத்தால் இருவரும் உண்மை உருவம் பெற்று இத்தலத்திறைவனை வழிபட்டுக் கந்தர்வ லோகம் சென்றார்கள்.

## கல்வெட்டு வரலாறு :

இத் திருக்கோயிலில் சோழமன்னரில் மூன்றாங் குலோத்துங்க சோழதேவரின் காலத்துக் கல்வெட்டு ஒன்றும் பல்லவரில் சகலபுவனசக்கிரவர்த்தி கோப்பெருஞ் சிங்கதேவருடைய காலத்துக் கல்வெட்டு ஐந்தும் ஆக ஆறு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. சோழமன்னர் காலத்துக் கல்வெட்டில் இறைவரின் திருப்பெயர் வடதளி உடையார் என்றும், பல்லவர் காலத்துக் கல்வெட்டில் வட தளி உடைய நாயனார் எனவும், வடதளி உடையார் வரும் துயரம் தீர்த்த நாயனார் எனவும் கூறப்பெற்றுள்ளது. இங்குக் குறித்த சோழர் பல்லவர் காலங்களில் இவ்வூர் வடகரை விருதராச பயங்கர வளநாட்டு மேற்கா நாட்டுப் பிர்மதேயம், ஓமாம்புலியூராகிய உலகளந்த சோழ சதுர்ப் பெதி மங்கலம் எனக் குறிக்கப்பெற்றுள்ளது.

விருதராச பயங்கர வளநாட்டின் உட்பகுதியாய் அடங் கிய நாடுகளில் காநாடு என்பது ஒன்றாகும். அது மேற் காநாடு கீழ்க்காநாடு என்னும் இருபகுதிகளை உடையது. இவற்றுள் கொள்ளிடப் பேராற்றின் வட கரையை ஒட்டிய பிரதேசமாகிய ஓமாம்புலியூர் திருக்கடம்பூர் இவைகள் மேற்காநாட்டைச் சேர்ந்தனவாகும். இவ் ஓமாம்புலியூர்க் குக் கிழக்கேயுள்ள திருக்கானாட்டுமுள்ளூர், கீழ்க்காநாட்

டைச்சேர்ந்ததாகும். இவ் ஓமாம்புலியூர்க்கு அண்மையில் ஆதனூர் என்னும் ஊர் இருக்கிறது. இதுவே திருநாளைப் போவார் பதியாகும். அவர் பதியைச் சேக்கிழார் மேற் காநாட்டு ஆதனூர் என்று குறித்திருப்பதை அறிய இவ் வூர்க் கல்வெட்டுப் பெரிதும் பயன்படுகின்றது.

## 2. திருக்கானாட்டுமுள்ளூர்

சோழவள நாட்டில் காவிரியின் வடகரைத் தலங்களில் 32 வது தலமாக விளங்குவது திருக்கானாட்டுமுள்ளூர். தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் திருஓமாம் புலியூருக்குக் கிழக்கே 5 கிலோ மீட்டர் தொலைவில் கொள்ளிடப் பேராற்றின் வடகரையில் உள்ளது. காட்டு மன்னார்குடியிலிருந்து ஓமாம்புலியூர் பேருந்துச் சாலையில் முட்டம் செல்லும் வழியில் இறங்கி தெற்கு நோக்கி 2 கிலோ மீட்டர் தூரம் சென்றால் இத்தலத்தை அடையலாம்.

சோழமன்னர் காலத்தில் சோழநாடுஒன்பது வளநாடு களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் விருதராச பயங்கர வளநாட்டின் உட்பிரிவுகளுள் ஒன்று கானாடு என்பதாகும். அக்கானாட்டைச் சேர்ந்த முள்ளூர் என்னும் ஊர் கானாட்டுமுள்ளூர் என வழங்கப்பெற்றது.

இறைவன் திருப்பெயர் அருள்மிகு பதஞ்சலிநாதர். இறைவியாரின் திருப்பெயர் அருள்மிகு கானார்குழலி. பதஞ்சலி முனிவர் வழிபட்ட சிறப்புடையது இத்தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத் திருப்பதிகம் ஒன்றைப் பெற்றுத் திகழ்கிறது.

### கோயிலமைப்பு :

முட்டத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தூரத்தில் இத்தலம் உள்ளது. கிழக்கு நோக்கிய திருக்கோயில். கோயிலின் எதிரில் அழகிய சூரிய புஷ்கரிணி தீர்த்தம் உள்ளது. கோயில் வாயிலில் விநாயகர் சந்நிதியும் மூன்று நிலைக் கோபுரமும் உள்ளன. உள்ளே சென்றதும், வெளிப் பிராகாரத்தை அடையலாம். திருக்கோயில் மிகவும் இடிந்தும் பழுதடைந்தும் உள்ளது. வலமாக வந்து முன் மண்டபத்தை அடைகிறோம். நந்தி பலிபீடங்களையும் அம்பாள் சந்நிதியையும் கடந்து இரண்டாம் வாயிலில் நுழைந்து இரண்டாவது திருச்சுற்றை அடைகிறோம்.

உள் திருச்சுற்று நாற்புறமும் மண்டபமாக அமைந்துள்ளது. விநாயகர், சோமாஸ்கந்தர் முதலிய பஞ்சமூர்த்திகளின் உற்சவ விக்கிரகங்கள், முருகன், தக்ஷிணாமூர்த்தி, மகாலக்ஷ்மி, நடராஜர், சூரியர், பைரவர் சந்நிதிகளை வழிபட்டுக்கொண்டு சுவாமி சந்நிதியை அடைகின்றோம். சுந்தரர் முத்தாக, மணியாக கரும்பின் தேறலாகக் கண்டு வழிபட்ட அருள்மிகு பதஞ்சலிநாதரிடம் நம்மனம் ஈடுபடுகின்றது. காசிவிசுவேசர் போன்ற சிவலிங்கத் திருவுருவம். சந்நிதியில் போக சக்தி அம்மன் விளங்குகின்றார். வாயிலில் பதஞ்சலி முனிவர் வழிபாடு செய்துகொண்டு நிற்கும் நிலையில் திருவுருவம் உள்ளது. நால்வர் திருவுருவங்கள் பழுதடைந்துள்ளன. முன் மண்டபத்தில் தெற்கு நோக்கி அம்பிகை எழுந்தருளியுள்ளார். அம்பிகை திருக்கோயில் கோட்டத்தில் துர்க்கை திருவுருவம் உள்ளது. முன் மண்டபத்தில் பழனியாண்டவர், சனீஸ்வர பகவான் சந்நிதிகள் உள்ளன.

## புராண வரலாறுகள்


### பதஞ்சலி வழிபட்டது :

கோதாவரிக்கரையில் வைபீனசம் என்னும் தலத்தில் ஸ்ரீவத்ச கோத்திரத்தில் அந்தணர் குலத்தில் தோன்றிய பதஞ்சலிமுனிவர் வீடு பேற்றை அடைய விரும்பித் தவம் செய்தார். இறைவன் அசரீரியாகச் சிதம்பரத்தை அடைந்து தம்மைப் பூசிக்குமாறு கூறியருளினார். சிதம்பரத்தை அடைந்து வழிபட்ட பதஞ்சலி முனிவரிடம் நந்திதேவர் கானாட்டுமுள்ளூரின் சிறப்புக்களைக் கூறி அங்கே சென்று இறைவனைப் பூசிக்குமாறு கூறினார். பதஞ்சலி முனிவர் இத்தலத்தை அடைந்து இறைவனை வழிபட்டுத் தவம் செய்தார்; இறைவன் அருட்காட்சி வழங்கினான். முனிவரும் விரும்பியவாறு வீடுபேறு அடைந்தார். இறைவனும் 'பதஞ்சலிக்கருளிய பரம நாடகன்' என்ற புகழுக்குரியவரானார்.

### அநிர்ஷ்டமிருத்திகா :

தண்டகாரண்ய முனிவர்கள் நந்திதேவர் ஆணைப்படி மதூகவனம் என்னும் பெயருடைய இத்தலத்தை அடைந்து வதஞ் செய்தனர். இறைவன் அவர்கட்கு அருள் செய்யத் திருவுளங்கொண்டு ஒருகாலடி வைக்கக்கூட இடமில்லாமல்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்



இன்றெமது நல்லிதழைப் புரந்துவரும் எம்முதல்வர்
மன்றுபுகழ்ச் சண்முகதேசிகரருளின் திருத்தோற்றம்.

எல்லா இடங்களிலும் தமது லிங்க வடிவங்களைத் தோன்று மாறு செய்தார். முனிவர்கள் அனைவரும் ஒவ்வொரு இலிங்க மூர்த்தியையும்வழிபட்டு விரும்பியபேறுகளை எய்தினர். இத் தலத்தில் எல்லா இடங்களிலேயும் மிர்த (மண்) இல்லாமல் லிங்க வடிவங்களாக இருந்தபடியால் அதிர்ஷ்ட மிருத்திகா க்ஷேத்திரம் எனப்பெயர் ஏற்பட்டது.

### சுநந்தன் - நந்தன் - வீடுபேறடைந்தது :

காஷ்மீரத்தில் பத்ரன் என்பவனுக்கு சுநந்தன், நந்தன் என்ற பெயருடைய இருபிள்ளைகள் இருந்தனர். உரிய பருவத்தில் தீய பழக்கங்கள் உடையவராய் பெற்றோரை வெறுத்தனர். பிள்ளைகளின் கொடுமையால் பெற்றோர் இறந்தனர். பிள்ளைகள் தங்கள் சொத்துக்களை யும் மனைவி மக்களையும் இழந்து பல ஊர்களிலும் சுற்றித் திரிந்தனர். இத்தலத்தை அடைந்ததும் நல்லறிவு தோன்றி யது. இருவரும் பிழை உணர்ந்து இறைவனை வழிபட்டு இறுதியில் முத்தியடைந்தனர்.

### தீர்த்தச் சிறப்பு :

இத்தலத்தில் ஆறு தீர்த்தங்கள் உள்ளன. கோயிலின் எதிரில் உள்ளது சூரிய புஷ்கரிணி. சூரியன் மூழ்கி வழி பட்ட தீர்த்தம். கார்த்திகை ஞாயிறு அன்று சுவாமி தீர்த்தங்கொடுத்தருளுவது. இதற்குக் கிழக்கே உள்ளது காமதீர்த்தம். திருக்கோயிலின் தென்திசையில் உள்ளது விஷ்ணுதீர்த்தம். இதற்கு மேற்கே உள்ளது பார்வதி தீர்த்தம். அதற்கும் மேற்கில் இந்திர தீர்த்தம் உள்ளது. ஆலயத்தின் வடபால் விநாயகர் துதிக்கையால் அமைக்கப் பட்டது கணுதிப தீர்த்தம்.

### அதர்மா அசாந்தன் சாபம் நீங்கியது :

சுதர்மா என்ற அந்தணரின் மக்களாகிய அதர்மா அசாந்தன் இருவரும் தீய பழக்கங்களால் தந்தையின் சாபத்திற்கு ஆளாகிப் பைசாசங்களாயினர். இத்தலத்தில் சூர்யபுஷ்கரிணியின் கரையிலுள்ள ஆலமரத்தில் தங்கி யிருந்தனர். அகத்தியர் தென்னாடுவந்த காலத்தில் இத் தலத்தில் தங்கி தன் சீடராகிய சுதர்மாவை மலர் கொண்டு வருமாறு பணித்தார். மலர்கொண்டுவரச்சென்ற சுதர் மாவை முற்காலத்தில் அரசனாயிருந்து பல பாவங்களைச் செய்து வேடனாய்ப்பிறந்த ஒருவன் வெருட்டித்துரத்தினான்.

சுதர்மா சூரிய புஷ்கரிணியில் விழுந்தார். வேடனும் மூழ்கினுன், தீர்த்தச் சிறப்பால் உண்மையான ஒளி மேனியைப் பெற்ருன். சுதர்மா இத்தீர்த்தச் சிறப்பை அறிந்து வியந்தார். பைசாசங்களாயிருந்த அதர்மாவும் அசாந்தனும் இதனை அறிந்து இத்தீர்த்தத்தில் மூழ்கித் தூயராயினர்.

### தருமசீலர் மகப்பேறு பெற்றது :

தருமசீலர் என்ற அந்தணர் மகப்பேறின்றி பல ஆண்டுகள் வருந்தி இத்தலத்தை அடைந்து சூரிய புஷ்கரிணியில் நீராடி இறைவனைவழிபட்டு மகப்பேறுற்ருர். சுபத்திரன் என்ற வணிகனும் இவ்வாறே வழிபாடுசெய்து மக்கட்பேறெய்தி மகிழ்ந்தான்.

### தர்மவர்மன் வீடுபேறுற்றது :

தர்மவர்மன் என்ற அரசன் கார்த்திகை மாதம் சுக்கில பக்ஷ தசமியில் இத்தலப் பெருமானுக்கு இரதோற்சவம் நிகழ்த்தி வீடுபேறுற்ருன்.

### கல்வெட்டு வரலாறு :

இவ்வூர்க் கோயிலில் விக்கிரம சோழ தேவர், வீரரா ஜேந்திர தேவர், மூன்ரும் இராசேந்திர சோழர் இவர்கள் காலங்களில் செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

இக்கல்வெட்டுக்களில் இவ்வூர், விருதராச பயங்கர வளநாட்டு, கீழ்க்கா நாட்டு முள்ளூராகிய திருச்சிற்றம்பலச் சதுர்வேதிமங்கலம் என்று குறிக்கப்பட்டுள்ளது. விருதராச பயங்கரன் என்பது முதற் குலோத்துங்க சோழனுடைய விருதுப் பெயர்களில் ஒன்று. இந்நாடு தெற்கே காவிரியி லிருந்து வடக்கே திருக்கெடிலம் வரையில் பரவியிருந்தது.

இளக்கண்டிரம் என்னும் ஊரிலுள்ள செந்தாமரைக் கண்ணன் பட்டனுகிய வளவன் பிரமாதிராயன், தட்சிணு மூர்த்திப்பெருமானுக்கு நாள்வழிபாட்டிற்கு நிலம் அளித் துள்ளான். திருச்சிற்றம்பலத்துச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார் இறைவர்க்குத் திருவமுதுக்கு நிலம் அளித்திருந் தனர் என்னும் செய்திகள் இக்கல்வெட்டுக்களில் குறிக்கப் பட்டுள்ளன.

# “அண்டத்து அரும்பெறல் மேகன்” *

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L.,

**முன்னுரை :**

மாணிக்கவாசகர், திருப்பெருந்துறையில் குருவடிவில் வந்து தம்மை ஆட்கொண்டருளிய இறைவனை, “அண்டத்து அரும் பெறல் மேகன்” என்று திருவாசகத்தில், திருவண்டப்பகுதி (66 – 95) என்னும் அகவலில், சிறப்புறப் போற்றியுள்ளார். இறைவனை ஓர் அரும்பெறல் மேகமாக உருவகம் செய்து, முப்பத்தொரு வரிகளில், மிக விரிவாகவும், அழகாகவும், மணிவாசகர் விளக்கியருளியிருக்கும் திறம், பெரிதும் வியந்து நயந்து சுவைக்கத்தக்கதாக விளங்குகின்றது. அவ்வரிகளின் திரண்டபொருட் சுருக்கம் வருமாறு :—

**பாடலின் பொருள் :**

“மிக மேலான இன்பப் பழங்கடல் ஆக விளங்கும் சிவமாவது, கரிய பெரிய முகில் போலத் தோன்றி, திருப்பெருந்துறை என்னும் மலையின்மீது ஏறி, விந்துதத்துவம் ஆகிய மின்னல் ஒளியினை, எல்லாத் திசைகளிலும் பரவுமாறு செய்து, ஐம்புல அவாக்கள் ஆகிய பாம்புகள் இரியவும், உலகியற் துன்பங்களாகிய கோடைக்கால வெப்மை ஒழியவும், அருள் மழையினைப் பொழிந்தது.”

“மழைபொழியுங்கால், மின்னலும் இடியும் தோன்றுதல் இயல்பு. சிவம் அருள்மழை பொழியுங்கால், விந்துதத்துவம் மின்னலாக மின்னியது ; நாததத்துவம் இடியிடித்தாற்போல முழங்கியது. மின்னியும் இடித்தும் மழை பொழியும் நிலையில்,

---

* சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தின்கண் நடைபெற்றுவந்து நிறைவுபெற்ற திருவாசக வகுப்புக்களின் நிகழ்த்திய விளக்கவுரைகளைத் தழுவியமைத்த கட்டுரை.

இந்திர கோபப்பூச்சிகள் பரவிப்பெருகும். உயிர்களின் அளவில்லாத பிறவிகள்போல அவை மிகுந்துக்காணப்படுகின்றன. கார்காலத்திற்குரிய தோன்றிப்பூக்கள் மலர்வதுபோல, அச்சிவத்தின் 'அஞ்சல்' என்ற திருக்கை விளங்கியது. காந்தள் மலர்களைப் போல, அடியார்களின் கூப்பிய கைகள் திகழ்ந்தன. அருள் ஆகிய வெள்ளம், இன்பச்சுழிகளைச் சுழலவிட்டுக்கொண்டு பெருக்கெடுத்து ஓடுகின்றது."

"இவ்வருள் வெள்ளத்தின் நீரைத் தலைப்பட்டுப் பருகுதற்குத், தவப்பேறு ஒரு சற்றும் வாய்க்காத பேதை உயிர்கள் ஆகிய மான்கூட்டங்கள், பிறவித் துன்பமாகிய நீர்விடாய் மேற்கொண்டு, அறுவகைப் பொய்ச் சமயங்களாகிய கானல் நீரினை, உண்மைநீர் என்று மயங்கி, அலைந்து திரிந்து வருந்துகின்றன."

"இந்நிலையில் அருள்வெள்ளமானது பெருகுதலால், மலப்பிணிப்பு ஆகிய பந்தம் என்னும் ஆற்றின்கரைகள், இருபுறத்தும் இடிந்து சிதைந்து அழிகின்றன. இருவினைகளாகிய மாமரங்கள், வேரோடு பறித்து வீழ்த்தப்படுகின்றன. இவ்வருள் வெள்ளத்தினை அடியார்கள், தங்கள் உள்ளமாகிய பெரிய குளங்களில் நிரப்பிக்கொள்கின்றனர்."

'அங்ஙனம் நிரப்பிக்கொண்ட அடியார்களாகிய உழவர்கள், வழிபாடு என்னும் வயலில், அன்பு என்னும் விதையினை விதைத்து, பேரின்பம் ஆகிய பயிர் விளையும்படிசெய்து, சிவ போகம் என்னும் சிறந்தபயனை நிரம்பத்துய்த்து மகிழ்கின்றனர்."

"இங்ஙனம் அருச்சனையாகிய வயலில், அன்பு ஆகிய விதையை விதைத்து, தொண்டர்கள் ஆகிய உழவர்கள், அநுபவித்து இன்புறும்படிதந்த அண்டத்து அரும்பெறல் மேகன் ஆகிய சிவபெருமான், நீடு இனிது வாழ்க!"

## திருவண்டப்பகுதி வரிகள் :

மேலே குறிப்பிடப்பெற்றவை, திருவாசகத்துத் திருவண்டப் பகுதி வரிகளின் திரண்ட பொருள் ஆகும். பொருள் பொதிந்த அந்தச் சிறந்த இனிய அழகிய வரிகள் வருமாறு :-

"பரமானந்தப் பழங்கடல் அதுவே,
கருமா முகிலில் தோன்றித்,
திருவார் பெருந்துறை வரையில் ஏறித்,

திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய,
ஐம்புலப் பந்தனை வாள் அரவு இரிய,
வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப,
நீடெழில் தோன்றி வாள்ஒளி மிளிர,
எந்தம் பிறவியிற் கோபம் மிகுந்து,
முரசு எறிந்து
மாப்பெருங் கருணையின் முழங்கிப்,
பூப்புரை அஞ்சலி காந்தள் காட்ட,
எஞ்சா இன்னருள் நுண்துளி கொள்ளச்,
செஞ்சுடர் வெள்ளம் திசைதிசை தெவிட்ட, வரையுறக்
கேதக் குட்டம் கையற ஓங்கி,
இருமுச் சமயத்து ஒருபேய்த் தேரினை
நீர்நசை தரவரும் நெடுங்கண் மான்கணம்,
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந் தாபம் நீங்காது அசைந்தன ;
ஆயிடை வானப்பேர் யாற்று அகவயிற்
பாய்ந்தெழுந்து இன்பப் பெருஞ்சுழி கொழித்துச்,
சுழித்தெம் பந்தமாக் கரைபொருது அலைந்து இடித்து,
ஊழூழ் ஓங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்பறித்து எழுந்து
உருவ அருள்நீர் ஒட்டா அருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறைஅகில்
மாட்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தில்
மீக்கொள மேல்மேல் மகிழ்தலில் நோக்கி
அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்
தொண்ட உழவர் ஆரத் தந்த
அண்டத்து அரும்பெறல் மேகன் வாழ்க.

## இலக்கியச் சுவைத் திறன் :

இவ்வினிய அழகிய பகுதியின்கண், எல்லாம் வல்ல இறைவனை, அவன்றன் பேரருட் பெற்றிமை பற்றி, மேகம் என்று குறிப்பிட்டுச் சிறப்பித்து உரைக்கத் தலைப்பட்ட மாணிக்கவாசகர் அவ்வடிப்படைக் கருத்தினுடன், படிப்படியே அதற்குத் தொடர்புடைய கடல் - மலை - மின்னல் - இடி - அரவு - கோடை - மழை - தோன்றிப்பூ - தம்பலப்பூச்சி - காந்தள்மலர் - வெள்ளம் - சுழி - கரை - மரம் - கானல்நீர் - மான்கூட்டம் - குளம் - வயல் - உழவர் - விதை

பயிர் என்னும் பலவற்றையும், ஒரு தொடர்புபடத் தொகுத்தமைத்து வரிசையாக்கி, அவைகள் பலவற்றினையும் அழகுற இணைத்துப் பிணைத்து, நீண்டதோர் உருவகம் ( Prolonged & Sustained Metaphor ) செய்து, இறைவனின் திருவருட் சிறப்பினை விளக்கியுள்ள திறம், அறிஞர் அனைவருக்கும் கழிபெருஞ்சுவை பயக்கும் இலக்கிய நலம் செறிந்ததொன்றாகும். திருவாசகத்தின் இலக்கியச் சுவை நலத்தின் திறத்திற்கு, இஃது ஒரு சிறந்த இனிய அரும்பெறல் எடுத்துக்காட்டு எனலாம்.

**உருவகம் :**

கவிஞன் தன் உள்ளத்தில் தோன்றும் நுண்ணிய கருத்துக்களை, ஏனையோர் உள்ளங்களிலும் நன்கினிது பதியும்படி, ஓர் உருவம் கொடுத்துத் திண்ணிய பொருளாக்கி, அழகும் சுவையும் அமையுமாறு வெளிப்படுத்துகின்ற ஓர் அரும்பெறல் அணியே, உருவகம் எனப்படும். கவிதைத் துறையில் உருவகம் என்னும் அணியானது, மிகவும் முதன்மையும் சிறப்பும் அருமைப்பாடும் வாய்ந்தது.

அருவமாகவும் நுண்மையாகவும் திகழும் கருத்துக்களுக்கும் பண்புகளுக்கும் ஓர் அழகிய பருவடிவம் படைத்துக் கொடுத்து அவற்றை அனைவருடைய மனக் கண்ணுக்கும் புலப்படுமாறு கொணர்ந்து நிறுத்தி விளக்குவது, உருவக அணியின் சிறப்பியல்பாகும். இத்துணைச் சிறந்த உருவகங்களை, மிக்க பொருத்தமும் சிறப்பும் உடையனவாகக் கையாளும் திறன், பெரும் புலமை நலம் எய்தப்பெற்ற ஒருசிலமேதைகளுக்கே அமைந்து இயலும். ‡

( தொடரும் )

‡ " Metaphor is by far the the most important figure of speech in poetry. Figures are the products of an emotional state. A thing is visualised as the symbol of an attribute that is the essence of a metaphor. When Wordsworth calls the daisy, " a nun " he presents to us the picture of modesty, shyness, gentleness and purity... The greatest of all exellences is to be happy in the use of a metaphor. It is certainly a mark of great genius. " —Dorthy Wilson

# சொக்கநாத வெண்பாவில் காணப்பெறும் சிவபெருமான் பற்றிய விளிகள்

புலவர், திரு. இரா. செல்வக்கணபதி, எம். ஏ.,

## சொக்கநாத வெண்பா :

தருமை ஆதீனத்தைத் தோற்றுவித்த அருளாளர் ஸ்ரீ குருஞானசம்பந்தர். அவர்களால் அருளிச் செய்யப்பெற்ற சாத்திர தோத்திர நூல்கள் எட்டு. தம் ஆன்மார்த்த மூர்த்தியாகிய மதுரைச் சொக்கநாதப்பெருமானை முன்னிலைப் படுத்தி அவர்கள் அருளிய இனிய தோத்திர நூல் சொக்கநாத வெண்பா. ஏறத்தாழ நூறுபாடல்களால் அமைந்த இவ்வரிய நூல் செறிவும், நுட்பமும் அமைந்த பெட்டகமாக விளங்குகின்றது. ஒவ்வொரு பாடலிலும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் மதுரைச் சொக்கநாதப்பெருமானை முன்னிலைப்படுத்தி, அப்பெருமானின் பேரருளை வியந்து, அவனது திருவிளையாடல்கள் பலவற்றையும் பேசி தமக்கு இன்னருள் பாலிக்க வேண்டுவது நெகிழ்ச்சியூட்டுகிறது. இந்நூல் முழுதும் சிவபரம்பொருளை ஸ்ரீ குருஞானசம்பந்தர் பல்வேறு திருப்பெயர்களால் விளித்துப் பேசுகின்றார். அவ்வாறான விளிகளைத் தொகுத்துக் காணும் முயற்சியிலேயே இக்கட்டுரை விரிகிறது.

## நாமங்கள் தோத்திரமே!

அகரம் முதலாக வகரம் இறுதியாக முப்பத்தொன்பது விளிச் சொற்களால் ஸ்ரீ குருஞானசம்பந்தர் மதுரைச் சொக்கேசனை முன்னிலைப்படுத்திப் பேசுகின்றார். இறைவனது அளப்பருங் கருணை : எல்லைகாண மாட்டாத பேராற்றல் : விருப்பு வெறுப்பற்ற திருவுள்ளம் : உலகுக்கெல்லாம் தலைவனாகும் முதன்மை போன்ற பல்வேறு சிறப்பியல்புகளை இவ்விளிச் சொற்கள் அழகுற விளக்குகின்றன. இறைவனது பொதுத் தன்மை கூறுகின்ற சொற்கள் சிலவற்றை விடுத்து, விளியாக அமைந்த சொற்களைமட்டும் இங்கே விளக்கமாகக் காணலாம். தூய தமிழ்ச் சொற்களும், வடமொழிச் சொற்களும், திரித்தமைந்த சொற்களுமென இவற்றைப் பகுத்துக் காணமுடிகிறது. எவ்வாறாயினும் 'நின் நாமங்கள் தோத்திரமே' என்ற அருள்மொழிக்கு ஒப்ப அப்பெருமானின் பல்வேறு இயல்பு கூறும் நாமங்கள் போற்றி மொழிகளாகவே அமைகின்றன.

## அகரத்தில் எட்டு :

அகர உயிர்போல் அறிவாகி எங்கும் நிறைந்திருக்கும் சொக்கநாதப் பெருமானை அகர முதன்மொழிகள் பலவற்றால் விளித்துத் துதிக்கின்றார். அகர வரிசை அடிப்படையில் அண்டன் (19) அண்ணல் (28, 35) அத்தன் (30, 61) அப்பன் (42) அமலன் (33, 38) அம்மான் (1) அரகரன் (63) அன்னையன் (45) என்ற எட்டுச் சொற்களாலே அப்பெருமானின் இயல்புகளைப் புலப்படுத்துகின்றார். அண்டங்களுக்கெல்லாம் தலைவன் அவனே என்பதனை அண்டன் என்ற சொல்லால் வியக்கிறார். எல்லா வுயிர்க்கும் தந்தையுந் தாயுமாகி நின்று தண்ணளி சுரக்கும் அவனது அளப்பருங் கருணை விளங்க அத்தன், அப்பன், அம்மான் அன்னையன் என்ற சொற்கள் உதவுகின்றன. எல்லா வுயிர்க்கும் தலைவனும் தன்மையினை 'அண்ணல்' என்ற சொல்லால் விரிக்கிறார். அரகரன் என்ற சொல்லாட்சி புதிதாக அமைகிறது. தாய் போன்ற கருணையாளன் என்ற பொருளில் 'அன்னையன்' என்ற சொல்வருகிறது. எண் குணங்களுள் ஒன்றாகப் பேசப்பெறுவது இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதல் என்பது, சிவபெருமானின் மலமற்ற தூய நிலையினை 'அமலன்' என்ற வடசொல்லால் போற்றுகின்றார். ஓரே சொல் ஒன்றுக்கு மேற்பட்ட பாடல்களிலும் வழங்கப்பெற்றிருப்பதனை அடைப்புக் குறிக்குள் இருக்கும் எண்களால் அறியலாம்.

## ஆசானும் ஆரூரனும் :

ஆகாரத்தை முதலெழுத்தாகக்கொண்ட விளிச்சொற்கள் ஐந்து காணப்படுகின்றன! ஆசான் (40) ஆண்டவன் (3, 7, 31, 81) ஆநந்தன் (39, 82) ஆரணன் (27, 70) ஆரூரன் (53). உயிர்களை எல்லாம் ஆட்கொண்டருளும் சிவபிரானுக்கே உகந்த விளிச்சொல்லாக அமைகிறது ஆண்டவன் என்ற சொல். தம்மை ஆட்கொண்டருளியகருணையை இடையறாது வியக்கும் ஆசிரியரது திருவுள்ளத்தில் ஏனைய விளிச்சொற்கள் எல்லாவற்றையும் விட ஆண்டவன் என்ற சொல் மேலோங்கிநிற்கிறது. நான்கு திருப் பாடல்களில் அச்சொல் ஸ்ரீ குருஞானசம்பந்தரால் வழங்கப் பெறும் பெற்றியினைக் கண்டு மகிழமுடிகிறது.

"எனை அருளில் ஆண்டவா சொக்கநாதா" (3)

"மதுரை நகர் ஆண்டவா சொக்கநாதா" (7)

"மலர்த்தாள் சூட்டிஎனை ஆண்டவனே சொக்கநாதா" (31)

"ஆண்டவனே சொக்கநாதா" (81)

என்றெல்லாம் நுட்பமான பொருள் வேறுபாடுகளை ஆண்டவன் என்ற விளிச்சொல்வழி ஆசிரியர் அமைத்துக்காட்டுகின்றார். முன்னதில் வியப்பும், அடுத்த தொடரில் ஆட்சி நலனும், மூன்றுவதில் கருணையும், இறுதியில் பெயரா நந்தன்மையும் விளங்குதல் தெரிகிறது. சச்சிதானந்த சொரூபத்தினை ஆநந்தன் என்ற சொல்லாலும், வேதமுதலா நந்தன்மையினை ஆரணன் என்ற விளியாலும் குறிப்பித்தருளும் அருமைப்பாட்டினைக் காண்கின்றோம். வியக்கத்தக்க ஒரு அழகினைக்கண்டு பூரிக்கமுடிகிறது. வேறு எந்த திருத்தலத்தினையும் இணைத்து ஓர் விளிப்பெயரினை அமைக்காது ஆரூரை நினைவுகூர்ந்து ஆரூரன் என்று அமைத்துக் காட்டுகின்றார். ஆகார முதல் எழுத்தில் முதற்சொல் ஆசான் என்றும், இறுதிச்சொல் ஆரூரன் என்றும் அமையும் எதிர்பாராத ஒப்புமை தமது ஞானகுருவாகத் திருவாரூரில் எழுந்தருளியிருந்த கமலை ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகரை இறைவனோடு ஒப்ப வைத்து எண்ணும் ஸ்ரீ குருஞானசம்பந்தரின் திருவுள்ளத்திற்கு இசைந்ததாகவே தோன்றுகிறது.

## அரசர்க்குரியன அரனுர்க்காயின :

ககரவர்க்க முதலெழுத்தில் காவலன் (64) கொற்றவன் (64) கோமான் (1) என்ற மூன்று சொற்கள் அமைகின்றன. நாடாளும் அரசனைக் குறிக்கும் இத் தூய தமிழ்ச்சொற்கள் மூன்றுமே எல்லா அண்டங்களுக்கும் தலைவனாகிய சிவபெருமானுக்கே உரியனவாகும் என்ற ஆசிரியரது நெஞ்சப்பாங்கினை உணர்ந்து மகிழமுடிகிறது.

## சிவனும் சொக்கனும் :

எட்டு இனிய சொற்கள் சகர எழுத்தின் வர்க்கத்தினை முதலாகக்கொண்டு சொக்கநாத வெண்பாவில் சிவபெருமானை விளிக்கும் விளிச்சொற்களாக ஸ்ரீ குருஞானசம்பந்தரால் ஆளப்பட்டுள்ளன. சங்கரன் (8) சத்தியன் (12) சம்பு (6) சித்தன் (51) சிவன் (88, 94)) சிற்பரன் (9, 91) சுத்தன் (63) சொக்கன் (94) என்பன அவ்வெட்டுச்சொற்கள். சிவன் என்பது தமிழ்ச் சொல்லானால், சொக்கனையும் சேர்த்து இரண்டு தமிழ்ச்சொற்களாகின்றன. எஞ்சிய ஆறு சொற்களும் சிவபெருமானின் அளவற்ற பெருங்குணங்களை விளக்கவென்றே ஆசிரியர் அமைத்த வடசொற்களாகக் காணப்படுகின்றன. இவற்றுள் சங்கரன், சம்பு என்ற சொற்கள் சிவனார்க்கே உரிய சிறப்புச் சொற்களாக அமைகின்றன. அப்பெருமானின் தூய அறிவுப் பிழம்பாகும் நிலைமையினையும், எவ்வித மலமும் பற்றமாட்டாத தூயநிலையினையும்

முறையே சித்தன், சுத்தன் என்ற இருசொற்களால் ஆசிரியர் விளக்குகின்றார். சத்தியன், சிற்பரன்போன்ற சொற்கள் சாத்திர நோக்குப் படைத்தனவாக விளங்குதலையும் அறியலாம்.

**தகரத்தில் மூன்று :**

தற்பரன் ( 9, 34 ) தன்னியன் ( 18 ) தாண்டவன் ( 93 ) என்ற மூன்று தகரவர்க்கச் சொற்களையும் சொக்கநாத வெண்பாவில் காணமுடிகிறது. வெள்ளியம்பலத்தில் கால்மாறி ஆடிய சொக்கநாதப் பெருமானைத் தாண்டவன் என்று அழைத்தல் பொருத்தமாகவே அமைகிறது. 'தன்னியன்' என்ற வடமொழி ஒலிப்புடைய சொல் ஆழ்ந்த நோக்குடையது.

**ஐந்து வடசொற்கள் :**

தகரத்தை அடுத்து நகரவர்க்க எழுத்தினை முதலாகக் கொண்ட ஐந்து வடசொற்களைக்காண இயலுகிறது. அவை முறையே நாதன் ( 49, 63, 79 ) நித்தன் ( 63, 30 ) நிமலன் ( 33, 53 ) நின்மலன் ( 16, 21, 30 ) நேசன் ( 32 ) என அமைகின்றன. நிமலன் என்ற சொற்பொருளும் நின்மலன் என்ற சொற்பொருளும் ஒத்ததாகவே அமையும். சாவா மூவாப் பெரியனாகிய சிவபெருமானை நித்தன் என்று அழைத்தது முற்றிலும் பொருத்தமுடையதே. தோழமை நெறி புதுக்கிய ஆரூர்ப் பெருமானை 'நேசன்' என அழைக்கும் பாங்கு பல்வேறு சிந்தனைகளைத் தூண்டுகின்றது.

**சங்கப்பாவலன் :**

பரமன் (64) பாவலன் (64) பிரான் (24) புனிதன் (7, 8) பூரணன் (27) என்ற ஐந்து பகர வர்க்கச் சொற்கள் இங்கே வருகின்றன. நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறிய திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளாகிய மதுரைச் சொக்கனைப் பாவலன் என்று அழைப்பது முற்றிலும் பொருத்தமுடையதேயாகும். எஞ்சிய சொற்கள் அப்பெருமானின் குண நலங்களையே வியந்து பேசுகின்றன.

இறுதியாக மன்னவன் ( 65 ) வேந்தன் ( 63, 78 ) என்ற இரண்டு சொற்களும்கூட முப்பத்தொன்பது விளிச் சொற்களோடு நிறைகின்றது.

**அனுபவ வெளிப்பாடு :**

சொக்கநாத வெண்பாவில் ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமானால் சிவபெருமானைக் குறித்த விளிச் சொற்களாக ஆளப் பெற்றிருக்கும் இவைகள் ஆழ்ந்த நோக்குடையன. இயல்பாக தோத்திரச் சொற்கள்போல் இவை தோன்றினும் நுட்பமான இறையியல்புகளை விளக்கும் அருளாளர்களது அனுபவ வெளிப்பாடென்றே இவற்றை எண்ணத் தோன்றுகின்றது. பல்வேறு நாமங்களைக் கூறி மலர்கொண்டு சிவபிரானை அர்ச்சித்தல் போல இவ்வகைச் சொற்களை விளிகளாக இடையிடையே பெய்து தமது தோத்திர நூலாகிய சொக்கநாத வெண்பாவினை அருச்சனைக்குரிய பாடல்களாகவே ஆசிரியர் அமைத்திருக்கிறார் என்று தோன்றுகின்றது. இத்தகு சொல்லாராய்ச்சிகளால் விளையும் குறிக்கத்தக்க பயன் இறைவனது திருவருளேயன்றிப் பிறிதில்லை என்பதனை உணர்தல் வேண்டும்.

---

## சிறுவர் பகுதி :- உங்கள் திறமைக்கோர் சோதனை !

( வி. சா. கு. )

### ஐந்துமனைவியர்க்கும் சமபங்கு

(4) ஒருமுத்து வியாபாரி; அவனிடம் 25 முத்துக்கள் கோத்த சரம் ஒன்று உள்ளது. செல்வன் ஒருவனிடம் தன் முத்து வாணிபத்தைத் தொடங்குகின்றான். முத்துக்களின் விலை மதிப்பு: முதல் முத்து விலை ரூ. 10. இரண்டாம் முத்து விலை ரூ. 20. மூன்றும் முத்து ரூ 30. இப்படியே ஒவ்வொரு முத்தின் விலையும் ரூ. 10 உயர்ந்துகொண்டேசெல்கிறது. செல்வனுக்கு மனைவியர் ஐவர். வியாபாரி கொண்டுவந்த முத்துக்கள் இருபத்தைந்தையும் வாங்கிக்கொண்டான். அவன் மனைவியர், முத்துக்களும் விலையும் சமமாக இருக்குமாறு தங்கட்குப் பங்கிட்டுக்கொடுக்கக் கேட்கின்றனர். அவர்களுக்குக் கோபம் வராமல் எவ்வாறு பங்கிட்டுக்கொடுக்கலாம் ?

# திருவோத்தூரில் குடமுழுக்கு விழா

தொண்டைநாட்டுப் பாடல் பெற்ற சிவத்தலங்களுள் ஒன்று திருவோத்தூர். திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு எழுந்தருளி, இங்கிருந்த ஆண் பனைகளைப் பதிகம்பாடி பெண் பனைகளாக மாற்றியருளிய வரலாறு பெரியபுராணத்துள் விரிவாகக் காணப்படுகிறது. சேயாற்றின் கரையில் இத்திருத்தலம் அமைந்துள்ளது காஞ்சிபுரத்திற்குத் தென்மேற்கே பத்தொன்பதுகல் தொலைவில் விளங்கும் இத்தலத்தில் எழுந்தருளி விளங்கும் இறைவன் வேதத்தின் உட்பொருளைத் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் விரித்துரைத்தமையால் (ஓத்து - வேதம்) இத்தலம் திருஓத்தூர் என வழங்கப்படுகிறது. இறைவன் பெயர் வேதநாதர். அம்மையின் பெயர் இளமுலைநாயகி.

மிகப் பெரிய இத்திருக்கோயில் சங்கநூல்களுள் குறிக்கப் பெற்றுள்ளது திருஞானசம்பந்தர் அருளிய ஒரு பதிகமும், அருணகிரிநாதரின் திருப்புகழும் இத்தலத்திற்கு உரியனவாகக் காணப்படுகின்றன. கருணாகரக் கவிராயர் இயற்றிய தல புராணம் ஒன்றும் அச்சிடப்பட்டுள்ளது. மூவேந்தர், மற்றும் குறுநில மன்னர்கள் வெட்டிய பழைய கல்வெட்டுக்கள் பல இன்றும் இத்திருக்கோயிலில் உள்ளன. தல விருட்சமாகப் பனை மரம் விளங்குகின்றது இதன் கனியினை உண்பார் மகப்பேறு எய்துவர் என்பது அனுபவ உண்மையாகத் திகழ்கின்றது. அம்பிகை, பிரமன், திருமால், கதிரவன், கருடன் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்ற பெருமைமிக்கது திருவோத்தூர்.

மகாமண்டபம், கருவறை முதலியன குலோத்துங்கன் காலத்திலும், மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்திலும் விரிவாக்கப் பட்டன. பவனிப்பிராகாரத்திலுள்ள கோபுரமும் வெளிச்சுற்று மதிலும் இராசகோபுரமும் விசயநகரத்து அரசனான கிருஷ்ண தேவராயரால் கி. பி. 15 ஆம் நூற்றாண்டில் எழுப்பப்பெற்றது. நூற்றுக்கால் மண்டபம் நாயக்க மன்னனான திருமலைநாயக்கனால் நிறுவப்பெற்றது. அம்மண்டபம் சிற்ப வேலைப்பாடு சிறந்து விளங்குவதோடு மேலே திருவிளையாடல்களை உணர்த்தும் சிற்பங்கள் பெரிய வட்டவடிவத்தினுள் அமைக்கப்பெற்றுள்ளன. இத்தகு சிறப்புமிக்க திருக்கோயில், புதிதாகத் திருப்பணி செய்விக்கப்பெற்றுவருகிறது. 1977 ஜனவரியில் இக்கோயிலின் குடமுழுக்கு விழா, குடமுழுக்கு விழாக் குழுவினரின் முயற்சியாலும் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களின் உதவியாலும் நடைபெறவுள்ளது. சைவப் பேரன்பர்கள் இத்திருக்கோயில் திருப்பணிக்குப் பொருளுதவிசெய்து பங்கேற்று உய்வார்களாக.

# செய்திகள்

## விளந்திடசமுத்திரத்தில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சீகாழியை அடுத்த விளிந்திடசமுத்திரத்தில் திரு. ம. துரைராஜ் திரு. ம. ஹரிதாஸ் சகோதரர்கள் புதிதாக எடுப்பித்துள்ள அருள்மிகு. க்ஷிப்ரபிரசாத கணபதி திருக்கோயில் குடமுழுக்கு விழாவை முன்னிட்டு, 29—11—1976 திங்கட்கிழமை மாலை யாகசாலை பூஜையினைத் தொடங்கிவைக்க எழுந்தருளினார்கள். துரைராஜ், ஹரிதாஸ் சகோதரர் இருவரும் மற்றும் ஊர்ப் பெருமக்களும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைப் பூரண கும்ப மரியாதைகளுடன் வரவேற்றனர் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் யாகபூஜையைத் தொடங்கிவைத்து வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி, துரைராஜ், ஹரிதாஸ் சகோதரர்களுக்கு ஆசிக்கவசமாகப் பட்டாடைகள் அணிவித்து ஆசியருளினார்கள். திரு. துரைராஜ் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்குப் பொன்னாடையையும், மாலையையும் அணிவித்தார். விழாக்குழுவினரின் சார்பில் புலவர் கல்யாணசுந்தரம் வரவேற்பிதழ் படித்தளித்தார். மாயூரம் திரு. விசுவநாத முதலியார் வரவேற்புரை நிகழ்த்தினார். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் விநாயகர் வழிபாடு பல்வேறு மூர்த்தி பேதங்களின் தத்துவம் முதலியவற்றை உலகியலோடு இணைத்து அனைவரும் உளங்கொள்ளும் வகையில் அருளாசி வழங்கினார்கள். (ஆசியுரை தனியே வெளியிடப்படுகிறது) நூற்றுக்கணக்கான அன்பர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை வணங்கி அருட்பூதி பெற்றனர். ஸ்ரீலஸ்ரீ குருமணி அவர்கள் அங்கிருந்து திருக்கடவூர்சோமவார தரிசனத்திற்கு எழுந்தருளினார்கள்.

## தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் குருபூஜை விழா

தருமை ஆதீன ஞானபீடத்தில் 25 வது குருமணியாக எழுந்தருளி இருந்து 26½ ஆண்டுக் காலத்தில், ஆதீன அருளாட்சிக்கு

உட்பட்ட 27 திருக்கோயில்களையும் புதுப்பித்துக் குடமுழுக்குச் செய்வித்து, கயிலைக் காட்சிகண்டு காசியம்பதியில் முத்திப் பேறு எய்திய ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பரிபூரணம் எய்திய ஐந்தாம் ஆண்டுக் குருபூஜை விழா 14—11—1976 ஞாயிற்றுக்கிழமை அன்று சிறப்பாக நடந்தேறியது.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் வழித் தோன்றலாய், தருமை யாதீன 26-வது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்து அருளாட்சி புரிந்துவரும் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தம் ஞானாசிரியர் காசியில் முத்திப்பேறு எய்தியமையை நினைந்து, ஸ்ரீ காசிவிசுவநாதப் பெருமான் திருக்கோயில் அமைப்பில் 25 கலசங்களுடன் கூடிய குருமூர்த்த ஆலயத்தை ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் அமைத்தருளினார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் குருமூர்த்த ஆலயத்தில் காலை மாலை அபிடேக ஆராதனைகளுடன் குரு பூஜை விழா சிறப்பாக நிகழ்ந்தது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காலை மாலை இரு வேளைகளிலும், அடியவர்களும், அன்பர்களும் சூழ எழுந்தருளி மேலக் குருமூர்த்தத்தில் திகழும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் குருமூர்த்தத்திற்கும், ஏனைய குருமூர்த்தங்களுக்குப் அபிடேக ஆராதனைகள் செய்வித்துச் சிறப்பு வழிபாடு நிகழ்த்தி அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கியருளினார்கள். தருமை ஆதீனப் புலவர்களும், ஆதீனக் கல்வி நிலைய ஆசிரியர்களும் பண்டார சாத்திரங்கள் பற்றி உரையாற்றினர். நண்பகல் மாகேசுரபூஜை நடைபெற்றது. நடராச சதகம் என்ற நூல் உரையுடன் விழா மலராக வெளியிடப் பெற்றது. மாயூரம், சிதம்பரம் மற்றும் பல இடங்களிலிருந்து திரளாக அன்பர்கள்வந்து குருபூஜைவிழாவில் கலந்துகொண்டு குருவருள் பெற்றனர்.

விழா நிறைவில் வேளூர் திரு. க. சொக்கலிங்க ஓதுவார் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் அருள்வரலாற்றை தக்க பக்கவாத்தியங்களுடன் நாமாளி பஜனை நிகழ்த்தி பக்தர்களை அருள் வெள்ளத்தில் திளைக்கச்செய்தார்கள்.

**மாயூரத்தில் :**

மாயூரம் தெய்வத் தமிழ் மன்றத்தில், தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நினைவாக - சமய இலக்கியப் பெருவிழா 13—11—76 சனிக்கிழமை மாலை ஏ. வி. சி.

திருமண மண்டபக் கட்டிடத்தில் இறைவணக்கத்துடன் மன்றத் தலைவர் திரு. ச. மகாதேவன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

மன்றச் செயலர் திரு. ஆர். இராசசேகரன் பி எஸ்சி.,பி.எல். அவர்கள் விழாவிற்கு வந்திருந்தோரனைவரையும் வரவேற்றுச் சிறப்புரையாற்றினார்கள். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் அருளாசியுரையை, ஆதீனக் கல்லூரி முதல்வர், தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம்.ஏ., அவர்கள் வாசித்தளித்தார்கள். சென்னை, 'திருக்கோயில்' ஆசிரியர், சித்தாந்தப் புலவர்மணி, தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திரு ந. ரா. முருகவேள் எம்.ஏ., அவர்கள் "இருபா இருபஃது" என்ற சாத்திர நூல் பற்றிய விரிவுரையையும், மொழிபெயர்ப்புத்துறை இயக்குநர். டாக்டர். திரு, ஔவை. து. நடராசன் அவர்கள் "சுந்தரர் தேவாரம்" என்ற தலைப்பில் தோத்திர விரிவுரையையும் ஆற்றினார்கள். விழாவிற்கு மாயூரம் அன்பர்கள் பலர்வந்து கலந்துகொண்டு கேட்டுப்பயன் பெற்றனர். நன்றியுரை வாழ்த்துரைக்களுடன்விழா இனிது நிறைவுற்றது.

### திருக்கடவூரில்

## கார்த்திகைச் சோமவாரநாளில் 1008 சங்காபிஷேகம்

உண்மை அன்போடு தம்மைப் பூசித்த மார்க்கண்டேயருக்காக எமனை சம்காரம் செய்த பேரருளாளனாகிய பெருமான் எழுந்தருளியிருந்து அருள்வழங்கும் திருக்கடவூர், தருமையாதீன அருளாட்சியில் தழைத்துவரும் பாடல்பெற்ற சிவத்தலம். உலக நாயகியாகிய அம்மை அபிராமி என்னும் திருநாமத்தோடு இத் தலத்தில் எழுந்தருளித் தண்ணருள் சுரக்கின்றாள் சிறந்த பிரார்த்தனைத் தலமாகிய இத்தலத்தில் வழக்கம்போல் கார்த்திகைச் சோமவார விழா பெருஞ் சிறப்புடன் நடந்து வருகிறது. நூற்றுக்கு மேற்பட்ட மணப்பொருட்களோடும் மருந்துத் தன்மையுடைய பொருட்களோடும் புனிதநீரை 1008 சங்குகளில் நிரப்பி இத்தலத்தே அமிர்த கலசமே தம் திருமேனியாக எழுந்தருளி விளங்கும் அருள்மிகு அமிர்தகடேசுவரருக்குக் கார்த்திகைச் சோமவார நாட்களில் அபிடேகிப்பர். இவ் வாண்டும் 22—11—76, 29—11—76, 6—12—76 ஆகிய நாட்களில் பல்லாயிரம் மக்கள் திரண்டிருந்துவழிபட, சங்காபிடேகம் சிறப்பாக நடைபெற்றது. ஒவ்வொரு சோமவாரத்திலும் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கடவூருக்கு எழுந்தருளி, சங்காபிடேகத்தை முன்னிருந்து நிகழ்த்தி

வழிபட்டு அன்பர்களுக்கு அருட்பிரசாதங்கள் வழங்கியருளினார்கள். அருள்மிகு. அமிர்தகடேசுவரர் அருள்மிகு. அபிராமி அம்மை அருள்மிகு காலசம்ஹார மூர்த்தி ஆகிய மூர்த்திகளுக்கு விசேஷ அலங்கார ஆராதனைகளும் அர்ச்சனையும் நடைபெற்றன. சோமவார நாட்களில் பஞ்சமூர்த்திகளின் திருவீதியுலா தக்க நாதசுர இன்னிசையுடன் நடைபெற்றது. உள்ளத்தை தூய்மைப் படுத்தும் சங்காபிடேகத் தீர்த்தத்தைப் பெற்று, பல்லாயிரம் மக்கள் திருவருள் பெற்றனர். 13—12—76 திங்களன்று கார்த்திகைக் கடைசிச் சோமவார அபிடேகம் இவ்வாறே சிறப்பாக நடைபெறவுள்ளது.

### சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில்

## பெரிய புராணம், திருக்கோவையார் விரிவுரை

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் திரு. S. சிவகுமார் அவர்களால் 7—11—76, 14—11—76, 21—11—76, 28—11—76 ஆகிய நாட்களில் பெரியபுராண விரிவுரை நிகழ்த்தப்பெற்றது. திருஞானசம்பந்தர் புராணம் நடைபெறுகின்றது.

தருமை யாதீனப் புலவர் திரு. N. R. முருகவேள் அவர்கள் 8—11—76, 15—11—76, 22—11—76 ஆகிய நாட்களில் திருக்கோவையார் விரிவுரை நிகழ்த்தினார்கள். இவ்விரு நிகழ்ச்சிகளிலும் அன்பர்கள் பலர் கலந்து கொண்டு விரிவுரைகளைக் கேட்டுப் பயனுற்றனர்.

## கிருத்திகைப் பிரசாதம் வழங்கு விழா

சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கு விழா 9—11—76 ஞாயிறன்று மாலை சென்னை வருமானவரி அதிகாரி திரு K S பட் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசாமி திருவுருவப்படத்திற்கு அர்ச்சனை செய்தபிறகு நிலைய ஓதுவார் திரு. S. ஞானப்பிரகாசம் திரு. N. இராமமூர்த்தி ஐயர் ஆகியோர் வேளூர்த் திருப்பதிகங்களையும் முருகன் நாமாவளிகளையும் பாடினார்கள். விழாத் தலைவர் சைவமும் தமிழும் தழைக்கத் தருமையாதீனம் ஆற்றிவரும் தொண்டுகளைப் பாராட்டி உரையாற்றினார்கள். விழா நிறைவில் வந்திருந்த அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கப்பெற்றன.

## திருக்கடவூர் சங்காபிஷேக தீர்த்தம் வழங்கு விழா

கார்த்திகைச் சோமவார தினங்களாகிய 22—11—76, 29—11—76 ஆகிய நாட்களில் திருக்கடவூரில் நடைபெற்ற 1008 சங்காபிஷேக தீர்த்தம் முறையே 23—11—76, 30—11—76 ஆகிய தேதிகளில் சென்னை சமயப்பிரசார நிலையத்தில் மாலை 7 மணி அளவில் ஸ்ரீ அபிராமி அம்மை திருவுருவப்படத்திற்கு அர்ச்சனை செய்து வழிபாடாற்றி வழங்கப்பெற்றது. திரு ஞானப்பிரகாசம், திரு. N. இராமமூர்த்தி அய்யர் ஆகியோர் திருக்கடவூர்த் திருப்பதிகங்கள் முதலியவற்றைப் பாராயணம் செய்தனர். அன்பர்கள்பலர் சங்காபிஷேகதீர்த்தம்பெற்றுப் பயன்பெற்றனர்.

## மாதாந்திர சமயப்பிரசார வழிபாடு

சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையச் சார்பில் மாதாந்திர சமயப்பிரசார வழிபாடு 28—11—76 ஞாயிறன்று மாலை சென்னை தம்புசெட்டித்தெரு, ஸ்ரீ காளிகாம்பாள் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ காளிகாம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள்செய்யப்பெற்றன. ஸ்ரீ விநாயகர் முதலிய பரிவார மூர்த்திகளுக்குத் தீபாராதனை செய்யப் பெற்றது. வழிபாட்டின்போது நிலைய ஓதுவார் திரு. S ஞானப்பிரகாசம் அவர்களும் திரு N. இராமமூர்த்திஅய்யர் அவர்களும்திருமுறைப் பாராயணம் செய்தனர்.

வழிபாட்டிற்குப்பின்னர் சமயப்பிரசாரக்கூட்டம் நடைபெற்றது. திரு. C. செல்வநடராஜமுதலியார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். கூட்டத்தில் P.V. வெங்கடேஸ்வரன், திரு சிம்மக்குரல் சீதாபதி, திரு. R. சிவஞானம் செட்டியார், குமாரி கௌரி திரு. கிருஷ்ணன் ஆகியோர் சமயப்பிரசார உரையாற்றினர். புலவர் திரு. க. ஆறுமுகம் அவர்கள் நன்றி நவின்றார்கள். வழிபாட்டிலும், சமயப்பிரசாரத்திலும் அன்பர்கள் பலர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## ஐப்பசி மாத ஜன்ம நட்சத்திர விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களது மாத ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் 14—11—76 சனிக்கிழமையன்று அருள்மிகு. வண்டமர்பூங்குழலி உடனுகிய ஸ்ரீமாணிக்கவண்ணர்

திருக்கோயிலிலும், திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான இலுப்பைப்பட்டு என வழங்கும் திருப்பழமண்ணிப் படிக்கரை அருள்மிகு. அமுதகரவல்லி உடனுறைய அருள்மிகு. நீலகண்டேசுவரர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. திருவாழ்கொளிபுத்தூர் - திருப்பழமண்ணிப்படிக்கரைத் திருப்பதிகங்கள் என்ற நூல் வெளியிட்டு வழங்கப்பெற்றது. அவ்வத் தலத்திருப்பதிகப் பாராயணமும் விரிவுரையும் நிகழ்த்தப்பெற்றன. ஆதீனக் கல்லூரி மாணவர்கள் திருக்கோயில் தூய்மைப் பணிசெய்தனர். அன்பர்கள் பலர் வழிபாட்டில் கலந்துகொண்டு வழிபட்டுப் பயன்பெற்றனர்.

உ

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

இருபத்தாறுவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## மாத ஜன்மநட்சத்திர வழிபாடு

நிகழும் நள ஆண்டு மார்கழித் திங்கள் 24 ஆம் நாள் (8--1--77) சனிக்கிழமை ஆயில்யநட்சத்திரத்தன்று கடம்பூர் கரக்கோயில் ஸ்ரீ சோதிமின்னம்மை உடனுறைய ஸ்ரீ அமிர்தகடேசர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடு நடைபெறும். அவ்வமயம் கடம்பூர் திருப்பதிகங்கள் என்ற நூல் வெளியிட்டு வழங்கப்பெறுவதுடன் திருப்பதிகப்பாராயணமும் விரிவுரையும் நிகழ்த்தப்பெறும். அன்பர்கள் பலரும் வந்து வழிபாட்டில் கலந்துகொண்டு பயன்பெறுவார்களாக. அன்று ஆதீனப்பல்கலைக் கல்லூரி மாணவர்கள் உழவாரப்பணி செய்வார்கள்.

# வியன் குருவாய்வந்து அருள்க!

**திரு. நாரண. துரைக்கண்ணன்**

திருவருளை நிறைவாகப் பெறுவ தற்குத்
தீர்த்தம், தலம், மூர்த்திதமை முறையாய்ச் சுற்றி
அரும்பொருளாஞ் சாத்திரமும் அனந்த மான
அருமைமிகு தோத்திரங்கள் ஓதி யோதிக்
குருபரனைக் குணக்குன்றும் குமரன் தன்னைக்
காடுமலை யெலாந்தேடி உழலு கின்றேன்;
பெருமாற்குப் பிரணவத்தை உபதே சித்த
பேராளன் எனக்கருள வந்தி டானே!

இருக்கின்ற இடத்திருந்தே இறைவன் தன்னை
இறைஞ்சிடலாம் என்போர்க்கு ஒன்று சொல்வேன்;
திரிகின்ற மனத்தையொரு நிலைநிறுத்தித்
தியானிப்போம் எனஎண்ணில் இலயிப்ப தில்லை;
அருமந்த மனையாட்டி, மக்கள், சுற்றம்
ஆசாபா சங்காட்டி அலக்க ழிப்பர்;
ஒருமுகமாய் உள்ளத்தைப் பதித்தி டற்கு
உதவுவது திருக்கோயில்; உண்மை காணீர்.

என்னுள்ளும் இறையிருந்து இயக்கு கின்றான்
எனும்உண்மை உணர்ந்திருந்தும் கோயில் செல்வேன்:
கண்ணிருந்தும் நம்முகத்தைத் தோற்றந் தன்னைக்
காண்பதற்கு ஆடிதான் வேண்டு தல்போல்
மண்ணுலகில் அமைந்திருக்குந் தலங் கள்தாமும்
மனம்மகிழ வணங்குதற்கு வேண்டும் என்பேன்;
மன்னுகின்ற திருத்தலங்கள் அனைத்தி னையும்
மாசற்ற நெஞ்சுடனே தொழச்செல் வேனே.

என்உயிரில் ஒன்றாகக் கலந்து நின்று
உறவாடும் பரமசிவமே வலிய வந்து
இன்னுயிர்க்குத் துணைவனாய், உடன் உறைந்து
ஈசனென வேறுருவில் அன்பாய் வந்து
மண்ணுலகின் வாழ்வியலை எனக்கு ணர்த்தி
மேல்நிலையில் என்னையும்ஆ ராய வைக்கும்
விண்ணவருங் காணொண்ணா வேத வித்தை
வியன்குருவாய் வரவேண்டி வழுத்து வேனே.

# எதிர்காலம்

## ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

( நளஹு மார்கழிமீ 1உ முதல் 29உ முடிய )

( 16—12—1976 முதல் 13—1—1977 முடிய )

ஸ்ரீ நளஹு கார்த்திகைமீ 30உ புதவாரம் ஹஸ்த நக்ஷத்திரத்தில் சூரிய உதயம் முதல் 29 நாழிகை 2 விநாடிக்கு ரிஷப லக்கினத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரிய பகவான் லோக சுபிட்சத்தை முன்னிட்டு விருச்சிக ராசியிலிருந்து தனுர் ராசியில் சங்கிரமணமாக தேவதினத்தின் உஷக் காலமான மார்கழி மாதப் பிரவேசம் செய்கிறார். மறுதினம் குருவாரம் மார்கழி மாதம் முதல் தேதியாகிறது. ஸ்ரீ புதபகவான் தானியாதிபதியாகிறார். சங்கிரமணகாலபலனாவது உலகெங்கும் ஸஸ்ய தானியங்களின் விருத்தியேற்பட்டு சகல ஜீவன்களுக்கும் போஷகம் ஏற்படும். தேசங்களில் சகல பிரஜைகளும் உழைப்புடையவர்களாக, இருப்பிட சௌகரியம் வாழ்க்கைவசதிகள் பலவும் பெற்று உய்வார்கள். திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் உள்ள புண்ணிய சீலர்கள் ஆற்றி வருகின்ற திருத்தொண்டின் வரப்பிரசாதமாகத் தேசங்களில் எங்கும் சுபிட்சம்ஏற்படும். ஆன்றோர்களின் பரோபகாராதி சமூகநல சேவையினால் மக்கள் நலம்பல அடைவர். தேவாலயங்களில் உற்சவங்கள் சிறப்பு பூசனைகள் நடைபெற்று வருவதினின்று பிரஜைகள் ஆஸ்திக வழியைப்பின்பற்றி சகலஐஸ்வரியங்களையும் பெற்று இனிது வாழ்வார்கள்.

### ஆருத்ரா தரிசனம்

" சித்திரையி லோணமுதற் சீரானி யுத்திரமாம் சத்ததனு வாதிரையுஞ் சார்வாகும் - பத்திவளர் மாசியரிகன்னி மருவு சதுர்த்தசிமன்றிசரபிஷேக தினமாம்" என்றது நமக்கு ஒரு வருஷமாக வருகிற காலம் தேவர்களுக்கு ஒரு நாளாகின்றபடியால் சிவபெருமானுக்கு தேவர்களால் தேவதினத்தில் செய்கின்ற ஆறுகாலபூசையைக் குறிப்பிடுவதாகிறது. மார்கழிமாதம் திருவாதிரை பிராதக்காலம் இரவு 25 நாழிகைக்குமேல் 30நாழிகைக்குள்

செய்யும் உஷக்கால பூசை, மாசிமாதம் பூர்வபட்ச சதுர்த்தசி காலை 10 நாழிகைக்குள் செய்யும் கால சந்தி பூசை, சித்திரை மாதம் திருவோணம் மத்தியானம் 20 நாழிகைக்குள் செய்யும் உச்சிகால பூசை, ஆனி மாதம் உத்திரம் மாலை 30 நாழிகைக்குள் செய்யும் பிரதோஷ காலபூசை, ஆவணி மாதம் பூர்வபட்ச சதுர்த்தசி இரவு 7½ நாழிகைக்குள் மாலையில்செய்யும் சந்தி பூசை, புரட்டாசி மாதம் பூர்வபட்ச சதுர்த்தசி இரவு 11¼ நாழிகைக்குள் செய்யும் அர்த்தசாம பூசையாகிறது. தேவர்களுக்கு உத்திராயணம் பகற்பொழுதாகும். தட்சிணாயனம் இரவுக் காலமாகும். ஆதலால் மார்கழி மாதம் திருவாதிரை பஞ்ச பஞ்ச உஷக்காலம் திருமஞ்சனமாகிறது. அவ்விதம் மாதங்களில்வருகிற நக்ஷத்திரம் திதிகளில் சூரியனுக்கு கேந்திரத்தில் சந்திரனிருப்பது புனித காலமாகும்.

இவ்வாண்டு மார்கழிமீ 20௳ (4—1—77) மங்களவாரம் இரவு நடராஜர் அபிஷேகம். 21௳ (5—1—77) புதவாரம் அன்று ஆருத்ரா தரிசனம்.

## 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

( சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ. )

மேஷராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். தனாதி சௌகரியங்களில் குறைவின்றியும் குடும்ப பாரம்பரிய கௌரவம் மேலோங்குவதாகவும் இருந்து வரும். சகோதரர் தொழில் துறைகளில் சிரமத்துடன் நற்பலனும் ஏற்படுவதாக இருந்து வரும். பூமி இயந்திர சாதனங்களில் நற்பலன் தரும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். இம்மாதம் 16௳ அளவில் முன்பு முடக்கமாக இருந்த சில பொருள்கள் கைகூடும். செய்தொழில் அல்லது உத்தியோகம் திறம்பட நடந்து வரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

## 2. ரிஷபம் – கார்த்திகை¾ – உரோகிணி – மிருகசீர்ஷம் ½

( இ. ஊ. ஏ. – ஓ. வ. வி. வு. – வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். தன சௌகரியம் இராஜ கண்யமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கும். சகோதரர்களினாலும் புத்திரர்களினாலும் நற்பாக்கியம் ஏற்பட்டு மனமகிழ்ச்சியை உண்டுபண்ணும். தீர்த்த யாத்திராடனம், தெய்வதரிசனம் மேலோர் பெரியோர் சந்திப்பு ஆகிய வாய்ப்புக்கள் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டிருக்கும். தாம்பத்திய வாழ்வில் தெய்வபக்தி நிரம்பக் காணும். செய்தொழில் அல்லது உத்தியோகம் சிறப்பாக நடந்து கொண்டிருக்கும். சனி ஞாயிறு சுபமாகும்.

3. மிதுனம்—மிருகசீர்ஷம் ½ — திருவாதிரை—புனர்பூசம் ¾
( கா. கி. — கு. க. ங. ச்சா. — கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். தன காரகன் வலுவால் தனுதி சௌகரியங்கள் குறைவின்றி இருந்து வரும். சகோதரர் பந்துக்கள் மனஸ்தாபம் பூர்வப்பொருள் விவாதம் வந்து பின்னர்சுமுகமாகும். பிரபலஸ்தர்கள் அனுகூலத்தினுல் எல்லாக் குறைபாடுகளும் நீங்கி, கண்ய நிலைமையை ஏற்படுத்திக் கொண்டிருக்கும். புத்திரர்களுக்கு சௌக்கிய பலன் தரும். மனைவிக்கு உஷ்ணுதிக்க வியாதிகண்டு வைத்தியத்தால் குணமாகும். செய்தொழில் அல்லது உத்தியோகம் சாதாரணமாக நடந்துவரும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

4. கடகம் — புனர்பூசம் ¼ — பூசம் — ஆயில்யம்
( ஹி. — ஹு. ஹே. ஹோ. ட. — டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். குடும்பாபிவிருத்தியில் நல்ல முன்னேற்றம் காணும். பண சௌகரியம் வாக்கு கௌரவம்மேலாகஇருந்துவரும்.சகோதரர்கள்கட்டுப்பாடாகவும் விசுவாசமாகவும் உதவிகரமாகவும் இருந்துவருவர். வித்துவத்துவம் கலை எழுத்துத் துறையில் பிரசித்தமும் நற்பலனும் தரும். கால்நடை வாகன வசதி பால் பாக்கியம் பெருகும். முயற்சித்த சகல காரியங்களிலும் ஜெய பிராப்தியை ஏற்படுத்தும். செய்தொழில் அல்லது உத்தியோகம் புத்தி சாதுரியமாக அரசாங்க பிரபலத்துடன் நடந்து வரும். புதன் வியாழன் சுபமாகும்.

5. சிம்மம் — மகம் — பூரம் — உத்திரம் ¼
(ம. மி. மு. மெ. — மோ. ட. டி. டு. — டே. )

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். தன சௌகரியம் சாதாரணமாக ஓரளவு செலாவணி இருந்துவரும். உடல் நலம் காரணமாக செலவுகளையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கும். உடன் பிறந்தவர் மிச்சிரமான மனப்போக்கில் காட்சி தருவர். இம்மாதம் 16உ க்குமேல் வாகனத்தில் ஓர் நஷ்டம் ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் மனவெறுப்பு தோன்றினும் சௌக்கிய பலன் தரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் அலுவல்கள் மிகுந்து காணும். ஞாயிற்றுக்கிழமையில் சூரியார்ச்சனை செய்ய நலன்தரும். வெள்ளி சனி சுபமாகும்.

6. கன்னி — உத்திரம் ¾ — ஹஸ்தம் — சித்திரை ½
( டோ. ப. பி. — பு. ஷ. ண. ட. — பே. போ. )

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பணவசதி ஜீவன வசதியில் போதுமான சௌகரியங்களையும்

மேன்மை ஸ்திதியையும் அளித்துவரும். சகோதரர்கள் மாறுபாடான மனோநிலைமையில் இருந்து வருவர். பூமி இயந்திர வகையில் சாதாரணபலனாக இருந்துவரும். வித்துவத்துவம் கலை தொழில்துறைகளில் மேலோரால் நன்மைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். இல்லத்தில் பெண்மகவு பிறக்கும். தாம்பத்திய வாழ்வில் சுமுகமும் தெய்வபக்தியும் நிரம்பிக் காணும். செய்தொழில் அல்லது உத்தியோகம் புத்தி சாதுரியமாக நடந்துவரும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

(ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். தன சௌகரியம் மேலாக இருந்துவரும். மனோதிடத்துடன் எல்லாக் காரியங்களும் செயல்பட்டுக்கொண்டிருக்கும். இதுவரையில் பிரயாசையாக இருந்த காரியங்களில் நற்பலனைக் கொடுக்கும். பசு பால்பாக்கியம் பெருகும். தெய்வ தரிசனமும் மேலோர் பெரியோர் சந்திப்பும் அடிக்கடி நிகழும் தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். சகல காரியங்களிலும் ஜெயம் ஏற்படும். செய்தொழில்களில் நன்மையைக் கொடுத்துவரும். செவ்வாய் புதன் சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

(தோ. – ந. நி. நு. நெ. – நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுமார் பலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் திருப்திகரமான சூழ்நிலையாகவும் பண வசதிகள் கண்ய குறைவின்றியும் இருந்துவரும். சகோதரர் பிதா இவர்களின் நலன்கருதி செலவுகளும் இருந்துவரும். புத்திரர் புத்திரிகளின் கல்வி கலைகளில் முன்னேற்றம் தரும். கணவன் மனைவியின் வாழ்வில் சுகம் மேலிடும். வியாஜ்ஜிய வழக்குகளில் ஜெய பிராப்தியாகும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் புத்தி சாதுரியமும் அரசாங்க நன்மையையும் அளிக்கும். வெள்ளி சனி சுபமாகும்.

9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

(யே. யோ. பா. பி. – பு. த. ப. ட. – பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். தனச் செலாவணி சீராக இருப்பினும் குடும்பசம்பிரதாயங்கள் நடந்து கொண்டிருக்கும். வரவேண்டிய பொருள்கள் தயக்கமாகவரும் சகோதரர்களின் மனஸ்தாபம் ஏற்பட்டு சரிபடும். பந்துமித்திரர்கள் மிச்சிரமாக நடந்து கொள்வர். மாதாவுக்கு மயக்கம் போன்ற நலிவு ஏற்பட்டு சௌகரியமடையும். புத்திரர் புத்திரி

களின் நலம் நன்ருக இருந்துவரும். தன் ஸ்திரிக்கு இரத்த சோகை போன்ற நலிவு ஏற்பட்டு வைத்தியத்தால் குணமாகும். செய்தொழில் அல்லது உத்தியோகம் சாதாரணமாக நடந்து வரும், ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

**10. மகரம் – உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½**
( போ. ஜ. ஜி. – கி. கு. கே. கோ. – கா. கி. )

மகரராசி 9 பாதங்களும் சுமார் பலனை நடக்கும் பண வசதி போஜனுதி சௌகரியங்களில் திருப்தியான நிலைமையாக இருந்துவரும் இம்மாதம் 16 ஆம்தேதிக்குமேல் ஓர் கணிசமான பொருள் வரவை ஏற்படுத்தும். சகோதரருக்கு இரத்தக்கட்டி போன்ற உஷ்ண வியாதி வந்து குணமாகும். இயந்திர சாதனங்களில் நற்பலன் தரும். ஓர் தூரப் பயணம் சம்பவிக்கும். தாரபுத்திரர்களுக்கு சௌக்கிய பலனைத்தரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் அலைச்சலாக இருப்பினும் புகழாக நடந்துவரும். செவ்வாய், புதன் சுபமாகும்.

**11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾**
( கு. கே. – கோ. ஸ. ஸி. ஸு. – ஸே. ஸோ. த. )

கும்பராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். குடும்பாவிருத்தியில் சிரமம் தோன்ருமல் பண வரவு கண்யமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கும். சகோதரர்களின் கல்வி, கலை, தொழில்துறைகளில் முன்னேற்றம்தரும். வாகன சௌகரியம், பசு பால் கறவை திருப்திகரமாக இருந்துவரும் தெய்வ தரிசனமும் மேலோர் பெரியோர் சந்திப்பும் அடிக்கடி ஏற்படும். தாரபுத்திரர்களுக்கு சௌக்கிய பலன் தரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் அரசாங்க நன்மையை ஏற்படுத்தும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி– ரேவதி.**
( தி. து. ஸ. ச. த. – தே. தோ. ச. சி. )

மீனராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். தன சௌகரியம் மேலாக இருந்துவரும். குடும்பநலம் பெருகும். சகோதரர்கள் சௌக்கியமாகவும் மேன்மை ஸ்திதியிலும் இருந்துவருவார்கள். வீடு புதுப்பித்தல், நாகரீக வஸ்துக்கள், வாகனங்கள் வாங்குதல் ஆகும். வித்துவத்துவம் மற்றும் மதிநுட்பகாரியங்களில் சிறப்பு தரும். பந்துமித்திரர்கள் விசுவாசபான்மையில் உதவிகரமாக இருந்துவருவார்கள். தாரபுத்திரர்களின் சௌக்கியம் மகிழ்ச்சியளிக்கும். செய்தொழில் அல்லது உத்தியோகம் புகழுடன் நடந்துவரும். சனி, ஞாயிறு சுபமாகும்.